பக்கங்கள்:11 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 21 சனிக்கிழமை 05.03.2022 கதிர் 120

**இது ரகசியம் அல்ல!**

பஸில் ராஜபக்ஷ எம்.பியாக தற்போதைய அரசுக்குள் வர முன்னரே - ஏன் கடந்த ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னரே - விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில்ல, வாசுதே நாணயக்கார அணிக்கும் பஸில் ராஜபக்ஷ தரப்புக்கும் இடையில் ☞2

## பஸிலின் ஜனாதிபதிக் கனவை நாமே தகர்த்தோம்

### ஒப்புக்கொண்டார் முன்னாள் அமைச்சர் விமல்



2019 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட பஸில் ராஜபக்ஷ திட்டமிட்டிருந்தார். அதனை நாம் தடுத்துநிறுத்தினோம். அதனால்தான் அவர் எம்முடன் மோதினார். இன்று எம்மை அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனால் நாம் கவலை அடையவில்லை.

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பங்காளிக் கட்சியான தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

அரச பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் ☞9

# அமைச்சுப் பதவியை தூக்கி எறிகிறார் வாசு

### விமல், கம்மன்பிலவுடன் இணைந்து மஹிந்தவை நேரில் சந்திக்கத் திட்டம்



நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, தனது அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்யப்போகின்றார் என்று அறிவித்துள்ளார்.

நேற்று ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட அவர், உதய கம்மன்பில மற்றும் விமல் வீரவன்ஸ ஆகியோரை அமைச்சுப் பதவிகளில் இருந்து நீக்கியதன் ஊடாக அரசு பாரிய தவறை இழைத்துள்ளது என்று கூறியுள்ளார். ☞9

## உடனடியாக வெளியேறுக

### கோட்டா வலியுறுத்து



அரசை விமர்சிப்பவர்களுக்கு அமைச்சுப் பதவி எதற்கு? அமைச்சரவையிலிருந்து ☞9

## வடக்கில் ரயிலுடன் மோதி இருவர் சாவு

வடக்கில் நேற்று ரயிலில் மோதுண்டு இருவர் உயிரிழந்தனர்.

அதற்கமைய யாழ்ப்பாணம், கோவில் வீதியில் ரயில் ☞9

## விமல், கம்மன்பிலவுக்கு எதிர்க்கட்சி கதவடைப்பு

### மனோவிடம் சஜித் உறுதி



அமைச்சரவையிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோருடன் நாம் ஒருபோதும் கூட்டணி அமைக்கமாட்டோம். தேர்தலுக்கு ☞2

## அரசு அரங்கேற்றும் நாடகத்தை நாட்டு மக்கள் நம்பவே கூடாது!

### ஜே.வி.பியின் தலைவர் அநுர வலியுறுத்து



ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் தீர்மானம் நிறைவேறுவதற்கான வாய்ப்பை வழங்கிவிட்டு, அதனை வைத்து உள்நாட்டு அரசியல் நடத்துவதற்கும், அனுதாப அலையைத் திரட்டுதற்கும் அரசு அரங்கேற்றும் நாடகத்தை நாட்டு மக்கள் நம்பக்கூடாது.

- இவ்வாறு ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி.

## சி.பிக்குக் கிடைத்தது புதிய அமைச்சு; போக்குவரத்து அமைச்சரானார் திலும்

### விமலவீரவின் இராஜாங்க அமைச்சு மாற்றம்; பதவியை மீண்டும் பொறுப்பேற்ற அருந்திக்க



அமைச்சுகளில் ஏற்படுத்தப்பட்ட மாற்றத்துக் கிணங்க, இரண்டு அமைச்சரவை அமைச்சர்களும், ஓர் இராஜாங்க அமைச்சரும் ஜனாதிபதி கோட்டாபய ☞9

## கையெழுத்துப் போர் தெற்கிலும் மும்முரம்

கொழும்பு, மார்ச் 05

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை ஒழிக்கக் கோரும் மனுவில் கையொப்பமிடும் போராட்டம் தெற்கிலும் மும்முரமாக ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

இன்று காலை 9 மணி முதல் 10 மணி வரை ☞9

## சுழற்பந்து ஜாம்பவான் ஷேன் வோர்ன் மரணம்



ஆஸ்திரேலியாவின் தலைசிறந்த கிரிக்கெட் வீரர்களில் ஒருவரான ஷேன் வோர்ன் மாரடைப்பால் நேற்று உயிரிழந்தார்.

சுழற்பந்து ஜாம்பவானான ☞2

## பிரதமர் அலுவலகத்தால் நியமிக்கப்பட்டவர் வடையும் ரீயும் வந்து சாப்பிட்டுப் போகலாம்

### இப்படிக் கூறுகின்றார் அங்கஜன் எம்.பி.

(இ.கலையமுதன்)



யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவுக்கு பிரதமர் அலுவலகத்தில் இருந்து ஒரு பிரதிநிதி நியமிக்கப்பட்டார் என்ற செய்தியை நான் மறுக்கவில்லை. ஆனால், அந்த நியமனத்துக்குக் கொடுக்கப்பட்ட ☞9

## அசிங்கமான அமெரிக்கரால் நாட்டுக்கு வினை

### கம்மன்பில்ல காட்டம்

கொழும்பு, மார்ச் 05

அமைச்சர் பதவியிலிருந்து விலக்கப்பட்ட பிவித்ரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில்ல, நாட்டின் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவை 'அசிங்கமான அமெரிக்கர்' (Ugly American) என்று வர்ணித்து, அவரால்தான் நாட்டுக்கு இந்த மோசமான நிலைமை என்று காட்டமாக வைத்தார். ☞9

## மின்தடை விவரம் வெளியீடு

நாட்டில் சில பிரதேசங்களுக்கு இன்று நான்கு மணி முதல் ஏழு மணித்தியாலங்களுக்கிடையில் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப் படவுள்ளது. ☞9



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கோஷ்டி மோதல் வலுத்துவிட்டது.

அதன் தற்போதைய பெறுபேறுதான் அரசிலிருந்து – அமைச்சரவையிலிருந்து – பஸிலின் எதிரணி தூக்கிக் கடாசப்பட்ட விடயம்.

சரி, பஸில் ராஜபக்ஷவைத் திட்டித் தீர்க்க உதய கம்மன்பில்ல 'அசிங்கமான அமெரிக்கர்' (Ugly American) என்ற வார்த்தைகளைப் பிரயோகித்தார். அதில் ஒரு சூட்சுமம் பொதிந்திருக்கின்றது. அதை வாசகர்களுடன் பகிர்வது முக்கியம்.

இந்த 'அக்லி அமெரிக்கன்' என்பது 1958 இல் வெளியான – பிரபலமான – ஓர் அரசியல் நாவல். பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. மேற்குலக இராஜதந்திர வட்டாரங்களிலும் அரசியல் தரப்புகளிலும் பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்திய நாவல். அமெரிக்க ஜனாதிபதி ஜோன் எவ் கென்டியின் நிர்வாக முறைமையில் பல மாற்றங்களை ஏற்படுத்தக் காரணமான இந்த நாவல் தென்கிழக்காசியாவில் அமெரிக்க இராஜதந்திர அணியின் பின்னடைவுகளை அம்பலப்படுத்தியது.

தென்னாசிய நாடான இலங்கையில் அமெரிக்க இராஜதந்திரத்தின் முகவராக பஸில் ராஜபக்ஷவை சித்திரிக்கும் உதய கம்மன்பில்ல, இலங்கையை அமெரிக்க அடிமை நாடாக்கும் முயற்சியில் தோல்வி என்பதைக் குறிப்பிட அந்த நாவல் தலைப்பையே பயன்படுத்துகின்றார் என்கின்றன அவர் தரப்பு வட்டாரங்கள். பஸில் இன்னும் அமெரிக்கக் குடியுரிமையைத் தக்க வைத்திருக்கின்றமையால் – அந்த அமெரிக்கரது செயற்பாடுகள் இலங்கையின் தேசாபிமானத்துக்கு அசிங்கமானவை என்பதைக் குறிப்பிடவும் இந்தச் செல்லாடலை அவர் கையாண்டார் என்கின்றன அந்த வட்டாரங்கள். ஏதோ ஒரு வகையில் அர்த்தமுள்ள திட்டல்தான்.

★ ★ ★

பொருளாதார நெருக்கடியால் துவண்டு கிடக்கும் நாட்டில் அரசியல் நெருக்கடியும் சூடு பிடித்திருக்கின்றது.

ராஜபக்ஷக்களிடம் வலிமையான அதிகாரங்கள் உள்ளன. தேவையான நாடாளுமன்றப் பலம் உள்ளது. பாதுகாப்புத் தரப்பு முழுக் கட்டுப்பாட்டில் உள்ளது. பல முக்கிய சிவில் நிர்வாகப் பதவிகளை தனக்கு நம்பிக்கையான முன்னாள் படையினருக்கு வழங்கி, தமது அதிகாரப் பிடியை இறுக்கமாக வைத்திருக்கின்றார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

ஆனால், மறுபுறத்தில் மக்களின் எதிர்ப்பும் சீற்றமும் வானளாவ எழும் நிலைமை. பொருளாதாரமோ முகம் கொடுக்கவே முடியாத பெரும் பின்னடைவில். மனித உரிமை விவகாரங்களில் சர்வதேச அழுத்தம் பெருமளவில் எழுந்துள்ளது. இதுவரையில் எதிர்க்கட்சிகள் துடிப்பாகவும், வலுவாகவும் செயற்படாவிட்டாலும் அரசுப் பக்கத்திலிருந்து எதிர்த்தரப்புக்குப் புதிதாக வந்திருக்கும் விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில்ல, வாசுதேவ நாணயக்கார அணிக்கு, அரசு எதிர்ப்பு அரசியல் தர்பாரை அட்டகாசமாக முன்னெடுக்கக் கூடிய களச் சூழல் என்பதுதான் முக்கிய விடயம்.

கோட்டாபய நிர்வாகம் தேன்கூட்டைக் கல்லெறிந்து கலைத்துவிட்டது. அதனால் அடுத்த சில வாரங்களும் மாதங்களும் இலங்கை அரசியல் படு சூடாக இருக்கும்.

அதிருப்திக் கொடி தூக்கியோருக்கு எதிராக சட்டத்தின் பெயரால் பாய்ச்சல் நடக்கும். அதுதானே ராஜபக்ஷக்களின் வழமையான அரசியல்...?

நேற்று செய்தியாளர் மாநாட்டில் பேசிய விமல் வீரவன்ஸ, கடந்த ஆண்டு கொவிட் தொற்றுக் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்த சமயத்தில் நாட்டை சில வாரங்களுக்கு மூடுமாறு தாம் பகிரங்கமாகக் கோரிக்கை விடுத்தமைக்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கெட்ட, கெட்ட வார்த்தைகளினால் தொலைபேசியில் தம்மைத் திட்டினார் என விலாவாரியான குற்றச்சாட்டுக்களை அடுக்கினார். இது போன்ற மேலும் பல உள்வீட்டு விடயங்கள் வரும் நாள்களில், வாரங்களில் வெளிவரும் என்று நம்பலாம்.

இதற்கிடையில் –

நேற்றிரவு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அரசியல் குழுவும், நாடாளுமன்றக் குழுவும் சேர்ந்து கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஒன்றாகக் கூடின என அறிய வந்தது. இந்தப் பத்தி எழுதப்படும் சமயத்தில் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

இப்போதுள்ள சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சு.க. இந்த அரசிலிருந்து வெளியே வர வேண்டும் என்ற கருத்தில் மைத்திரியார் இருப்பதாகத் தெரிகின்றது. கட்சிச் செயலாளர் தயாசிறியின் நிலைப்பாடும் இதுதான். ஆனால், நிமால் சிறிபால டி சில்வா போன்ற ஒரு சிலர் – குறிப்பாக அரசில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவியை வைத்திருப்போர் – அரசில் தொடர்ந்து நீடிக்கவே விரும்புகின்றனர். கூட்டத்தின் முடிவு நள்ளிரவுக்குப் பின்னர் – பெரும்பாலும் இன்று காலை – தெரியும் எனஎதிர்பார்க்கப்பட்டது.

அதேசமயம், இப்பத்தி எழுதப்படும் போது – நேற்றிரவு – ஜெனிவாவில் மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை விடயம் விவாதத்துக்கு எடுக்கப்பட்டது. நேற்றிரவு நேரம் பிந்தி விட்டதால் மிகுதி விவாதம் திங்கள் காலையில் நடக்கும் என அறிவிக்கப்பட்டது.

இந்த விவாதத்தில் கலந்து கொண்ட இந்தியா, இலங்கைத் தமிழ் மக்களின் சட்டபூர்வமான அபிலாஷைகளை முழுமையாக நிறைவு செய்ய உரிய நடவடிக்கை எடுக்கும்படி இலங்கையைக் கோரியது. அனைத்துப் பிரஜைகளினதும் பாதுகாப்பையும் மனித உரிமைகளையும் உறுதிப்படுத்துமாறு கோரிய இந்தியா, அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை உறுதிப்படுத்தமாகாணசபைத் தேர்தல்களை விரைந்து நடத்துமாறும் அங்கு வலியுறுத்தியது.

உயிரிழந்தோரை நினைவு கூருவோர் கைது செய்யப்படுகின்றமை, பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மூலமான அடக்கு முறை போன்றவற்றைக் கனடா கண்டித்தது.

புதிய அரசமைப்புத் தயாரிப்பில் வெளிப்படையான, சகல தரப்புகளையும் உள்ளடக்கிய, பொது நிலைக் கலந்துரையாடலை மொண்டிநீக்ரோ நாடு வலியுறுத்தியது.

பொறுப்புக் கூறலை நிலைநாட்டுவதற்கு மேலும் முட்டுக்கட்டைகள் போடப்பட்டிருப்பதாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செலி பச்சலெட் அம்மையார் குறிப்பிட்டார்.

அவரின் அலுவலகம் பொறுப்புக் கூறலை நிலை நிறுத்துவதற்கு எடுத்துள்ள நடவடிக்கைகளை ஐரோப்பிய ஒன்றியம் வரவேற்றது.

பொலிஸ் காவலில் பலர் உயிரிழந்தமை தொடர்பில் நோர்வே கவலை வெளியிட்டது.

சகல மக்களுக்கும் உரிய இடத்தை அளிக்க வேண்டிய சமூகத்தில் 'ஒரே நாடு; ஒரே சட்டம்' ஏற்படுத்தக் கூடிய மோசமான பாதிப்புக் குறித்து பிரிட்டன் விசனம் தெரிவித்தது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் மேலும் பல சீர்திருத்தங்களை வலியுறுத்திய ஜேர்மனி, உண்மையான நல்லிணக்கத்துக்கும், பேண்தகு சமாதானத்துக்கும் பொறுப்புக் கூறலும் நீதி நிலைநாட்டப்படுதலும் அத்தியாவசியம் என வலியுறுத்தியது.

மிகுதி விவாதம் திங்கள் தொடரும்.

இன்று விடியும் போது இலங்கை அரசியலில் பல மாற்றங்களுக்கான பூர்வாங்க விடயங்கள் அரங்கேற இருக்கின்றமை பற்றிய செய்திகள் வெளியாகும் வாய்ப்புகள் அதிகம் இருப்பதாகத் தோன்றியது. பார்ப்போம்.

– மின்னல் –

## விமல், கம்மன்பில...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
முன்னும் சரி, பின்னும் சரி இத்தகைய இனவாதிகளை எம்முடன் சேர்க்க மாட்டோம் என எதிர்க்கட்சி தலைவர், ஐக்கிய மக்கள் சக்தி தலைவர் சஜித் பிரேமதாஸ எம்.பி., எம்மிடம் உறுதியாகத் தெரிவித்துள்ளார்.

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணி, ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

## சுழற்பந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இவர் தனது 52 ஆவது வயதில் காலமானார்.

தாய்லாந்துக்குச் சுற்றுலா சென்றிருந்தபோது இன்று இவர் மாரடைப்பு காரணமாக உயிரிழந்தார் என்று சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த 24 மணிநேரத்துக்குள் ஆஸ்திரேலிய கிரிக்கெட்டுக்கு ஏற்பட்ட இரண்டாவது பேரிழப்பு தரும் செய்தியாக இது அமைந்துள்ளது என ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இறைச்சிக் கோழி விற்பனை
புறோய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

U.S.A பாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500

சபரிமலை
ஸ்ரீ ஐயப்பன் றேடர்ஸ்
Sabarimalai Sri Iyappan Traders
இல.315, கண்டிறோட், கிளிநொச்சி.
No. 315, Kandy Road, Kilinochchi.
Tel:- 021 228 3701, 076 307 8091


விசேட நிகழ்வுகளுக்கும், வியாபார நிலையங்களுக்கும் இலவச Delivery - அனைத்துத் தேவைகளுக்கும்
077 986 2476 - 077 983 8091 எனும் இலக்கங்களுக்கு வரும் ஓடர்களுக்கு சலுகை வழங்கப்படும்.
076 307 8091, 021 228 3701, 077 986 2470

அண்ணா விரைவுப் பொதிகள் சேவை

கனடா & நோர்வே - Rs.1650
சுவிஸ் - Rs.1550
075 330 5500, 070 330 5500
076 122 1566
யாழ்ப்பாணம் - நல்லூர் - வட்டுக்கோட்டை - சங்கானை - சுன்னாகம் - ஆவரங்கால் - நெல்லியடி - கைதடி - சங்கத்தானை - பளை - கிளிநொச்சி - புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவு - கனகராயன்குளம் - மல்லாவி - மன்னார் - வவுனியா - திருகோணமலை - மூதூர் - கொழும்பு

POST YOUR AD yarlads.com
உங்கள் விளம்பரங்களை இலவசமாகப் பதிவிட

காலைக்கதிர்
Kalaikkathir

# முழுமையாக முடங்கும் ஆபத்தில் தனியார் பஸ் போக்குவரத்துகள்?

## எச்சரிக்கை தகவல் வெளியானது

டீசல் இல்லையேல் 90 வீதமான பஸ்கள் போக்குவரத்திலிருந்து விலகும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் செயலாளர் அங்குன பிரியஞ்சித் இந்த எச்சரிக்கையினை விடுத்துள்ளார்.

நாட்டில் தற்போதுவரை எரிபொருள் முறையாக கிடைக்காதமையால் 70 வீதமான தனியார் பஸ்கள் போக்குவரத்திலிருந்து வெளியேறியுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், பஸ்களுக்கு எரிபொருள் முறையாகக் கிடைக்காத பட்சத்தில் 90 வீதமான பஸ்கள் போக்குவரத்திலிருந்து விலகவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, தங்களுக்குத் தேவையான டீசலை பெற்றுக்கொள்வதற்காக பஸ் சாரதிகள் பல மணிநேரம் வரிசையிலும் தூக்கமில்லாதும் காத்திருக்கின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே, பஸ்கள் ஓடுவதற்கான டீசலையாவது பெற்றுத் தருமாறு அமைச்சரிடம் கோரிக்கை விடுக்கின்றோம். இல்லையேல், அதிகமான பஸ்கள் போக்குவரத்திலிருந்து விலகும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# புதைக்கப்பட்ட நிலையில் 176 கைக்குண்டுகள் மீட்பு!

## முல்லைத்தீவில் சம்பவம்

முல்லைத்தீவு – முள்ளிவாய்க்கால் பகுதியில் நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முள்ளிவாய்க்கால் கிழக்கு சன சமூக மண்டபத்திற்கு அருகில் கடந்த புதன்கிழமை நபரொருவர் காணியை துப்புரவு செய்துள்ளார்.

இதன்போது அவரால் இந்தக் கைக்குண்டுகள் அவதானிக்கப்பட்ட நிலையில் உடனடியாக முல்லைத்தீவு பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி பகுதிக்குச் சென்ற முல்லைத்தீவு பொலிஸார் அங்கு ஆய்வு பணியை மேற்கொண்ட போது 176 கைக்குண்டுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்த நிலையில் அப்பகுதிக்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் தொடர்ந்து அப்பகுதியில் அகழ்வுப் பணிகளை முன்னெடுப்பதற்கு முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தின் உத்தரவு பெறும் நடவடிக்கையில் முல்லைத்தீவு பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

# கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட இருவருக்கும் தலா 10 ஆயிரம் ரூபா தண்டப்பணம்

புளியங்கூடல் வடக்கு பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் 2 ஆயிரத்து 400 மில்லிகிராம் கஞ்சாவுடனும், வேலணை – வங்களாவடி, முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த 40 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் 2 ஆயிரம் மில்லிக்கிராம் கஞ்சாவுடனும் கைது செய்யப்பட்டனர்.

ஊர்காவற்துறை பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், ஊர்காவற்துறை பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் மற்றும் பொலிஸார் இணைந்து இந்தக் கைது நடவடிக்கையை மேற்கொண்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் இருவரும் ஊர்காவற்துறை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இதன்போது அவர்கள் இருவருக்கும் தலா பத்தாயிரம் ரூபா தண்டத்தை செலுத்துமாறு ஊர்காவற்துறை நீதிமன்றம் விதித்தது.

# பட்டாவத்த பாடசாலை கட்டடம் புனரமைப்பு

## செந்தில் தொண்டமான் நடவடிக்கை



பட்டாவத்த தோட்டப் பாடசாலைக் கட்டடம் சேதமடைந்திருந்த நிலையில், மறுசீரமைக்கப்பட்ட கட்டடத்தை இ.தொ.காவின் உப தலைவர் செந்தில் தொண்டமான் திறந்து வைத்துள்ளார்.

கட்டடத்தை சீர்செய்து தருமாறு பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் முன்வைத்த கோரிக்கைக்கு அமைய, செந்தில் தொண்டமானின் விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# திருநெல்வேலி ஆலயத்தில் திருட்டுச் சம்பவம்; குற்றஞ்சாட்டப்பட்ட 9 பெண்களும் மறியலில்!

திருநெல்வேலி வழுங்கத்தடை காளிகோவில் ஆலயத்தில் திருட்டில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 09 பேரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

திருநெல்வேலி பகுதியில் உள்ள காளி கோவில் ஒன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்ற தேர்த்திருவிழாவில் கலந்துகொண்ட பக்தர்கள் மத்தியில் ஊடுருவிய திருட்டுக் கும்பல் ஒன்று நான்கு பெண் பக்தர்களின் சங்கிலிகளை அறுத்துக் களவாடியுள்ளது.

சங்கிலிகளை பறிகொடுத்த பெண் பக்தர்கள் அது தொடர்பில் ஆலய இளைஞர்களிடம் தெரிவித்தமையை அடுத்து துரிதமாக செயற்பட்ட இளைஞர்கள் ஆலயத்துக்கு வந்திருந்த சந்தேகத்துக்கு இடமானவர்களை நோட்டமிட்டுள்ளனர்.

அதன் போது சந்தேகத்துக்கு இடமான முறையில் ஆலய வளாகத்தில் நடமாடிய சில பெண்களை விசாரித்த வேளை அவர்கள் வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை அறிந்து கொண்டனர்.

அதனை அடுத்து அவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளில் 09 பெண்கள் இனம் காணப்பட்டுள்ளனர்.

அவர்களை ஆலயத்தில் மறித்து வைத்தவாறே சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து அங்கு விரைந்த பொலிஸார், 09 பெண்களையும் தமது பாதுகாப்பில் எடுத்து அவர்களைக் கைது செய்து விசாரணை செய்தனர்.

அதன் போது அவர்கள் தாங்கள் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் எனக் கூறியுள்ளனர். அவர்களை சோதனை செய்தவேளை அவர்களில் ஒருவரின் உடைமையில் இருந்து சங்கிலி ஒன்று மீட்கப்பட்டது.

அதேவேளை மேற்படி கும்பலை ஆலயத்துக்கு அழைத்து வந்து இறக்கி விட்ட ஓட்டோ இரண்டை அடையாளம் கண்டுள்ளனர். அதன் அடிப்படையில் ஓட்டோ சாரதிகளை பொலிஸார் தேடி வருகின்றனர்.

அத்துடன் இந்தப் பெண்களுடன் சில ஆண்களும் ஆலயத்துக்கு வந்து இருக்கலாம் எனவும் சந்தேகம் தெரிவித்தனர்.

09 பெண்களிடமும் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், அவர்களை யாழ்.நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தியவேளை அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# இலங்கைக் கலைஞர்களுக்குத் திறமைகள் அதிகம் அவர்களும் இந்திய திரைப்படத் துறைக்கு வேண்டும்

## இந்திய திரைப்பட நடன இயக்குநர் கலா மாஸ்ரர் தெரிவிப்பு

இலங்கை கலைஞர்களிடம் நிறைய திறமை இருக்கிறது. அவர்களையும் இந்தியத் திரைப்படத் துறைக்குள் உள்வாங்க வேண்டும் என இந்திய திரைப்பட நடன இயக்குநரும், மான் ஆட மயில் ஆட நிகழ்ச்சித் தொகுப்பாளருமான கலா மாஸ்டர் தெரிவித்துள்ளார்.

வவுனியாவிற்கு வருகை தந்த அவர் வவுனியா, குருமன்காடு பகுதியில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் நடத்திய ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நீண்ட காலத்துக்குப் பின்னர் நான் சிறிலங்கா வந்துள்ளேன். நான் பல தடவை படப்பிடிப்புக்காக கொழும்பு வந்திருக்கின்றேன். படப்பிடிப்புக்குச் சென்று அதனை முடித்து விட்டு மீண்டும் இந்தியா சென்று விடுவோம். முதல் தடவையாக நான் வவுனியா வந்துள்ளேன். என்னுடைய அதிக ரசிகர்கள் இலங்கையைச் சேர்ந்த தமிழர்கள் தான். நான் கனடா, லண்டன் என பல இடங்களில் நடன வகுப்புக்கள் எடுக்கின்றேன். அங்கும் ஈழத்தமிழர்களே அதிகம் வருகிறார்கள்.

இலங்கையில் ராமர், இராவணன் இருந்த இடங்கள் உள்ளன. அதனைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை. இலங்கைத் தமிழர்களுக்காகவும் எனது வகுப்புக்கள் இருக்கும். இலங்கைத் தமிழர்களிடம் நல்ல திறமை உள்ளது. லொஸ்லியா எல்லாம் இலங்கையில் இருந்து வந்து இந்தியாவில் பிரபல்யமாக உள்ளார். இதேபோல் கனடாவிலும் எனது மாணவர்கள் உள்ளனர். வயது வேறுபாடின்றி எல்லோரிடமும் ஒரு திறமை இருக்கிறது. சினிமாவைப் பொறுத்தவரை வயது ஒரு பிரச்சினையே கிடையாது. திறமை தான் முக்கியம். இலங்கைக் கலைஞர்களையும் இந்தியத் திரைப்படத் துறைக்குள் உள்வாங்க வேண்டும். அதற்கான முயற்சிகளை நான் மேற்கொள்வேன்.

யுத்தம் காரணமாக இலங்கைத் தமிழர்கள் பாதிக்கப்பட்டமை பற்றி எனக்கு நிறைய கதைகள் தெரியும். அவற்றைக் கேட்டு நான் வேதனையடைந்து இருக்கின்றேன். நேரில் பார்க்கும் போது சில இடங்களில் நிறைய கவலையாக இருந்தது. சில இடங்களில் நான் கண்ணீர் விட்டு அழுது கூட இருக்கின்றேன். இந்த உலகத்தில் எல்லோருக்கும் சுதந்திரம் உண்டு. யாரும் யாருக்கும் அடிமை கிடையாது. கனடா, லண்டன் எனப் பல நாடுகளில் தமிழர்கள் கோடீஸ்வரர்களாக இருக்கிறார்கள். அந்த நாடுகள் அதற்கு உரிமை கொடுத்துள்ளன. அப்படியிருக்கும் போது ஏன் இங்கு அப்படி கொடுக்க முடியாது? நான் எப்போதும் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக இருப்பேன்.

நான் கொழும்பு போகின்றேன், வவுனியா போகின்



றேன் என்று சொன்ன போது எல்லோரும் அங்கு போறியா? பயமில்லையா என்றார்கள். ஆனால் எந்த பயமும் கிடையாது. நானும் கணவனும் மட்டுமே தனியாக வந்துள்ளோம். எல்லா இடத்தையும் பார்க்கின்றோம். இது ராமர், முருகன், இராவணன் வாழ்ந்த இடம். இங்கு பயமில்லாமல் வரலாம். எந்த இடத்துக்கும் செல்லலாம். இங்கு வாழும் மக்களை எல்லோரும் வந்து பார்க்க வேண்டும். அது ஒரு பாடம். இந்த மக்களுக்காக நாம் குரல் கொடுக்கனும் எனத் தெரிவித்தார்.

(100)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## கூட்டுக்குள் குழப்பம்

அரசுக் கூட்டுக்குள் குழப்பம் வெளிப்படையாக அம்பலமாகி விட்டது.

இனி, சுட்டமண் நிலைமைதான். ஒட்டுவதற்கு வாய்ப்பு மிகவும் குறைவு.

இந்த முரண்பாடும், பிளவும் இந்த மட்டத்துடன் அடங்கப் போவதில்லை. மேலும் பிளவுகள், பிரிவுகள், முரண்பாடுகள் வெடிக்கலாம் என்றே தெரிகின்றது.

அரசுக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் பதினொரு கட்சிகளைச் சேர்ந்தோர், ஆளும் தரப்பில் தாங்கள் புறக்கணிக்கப்படுகின்றனர் என்று தெரிவித்து ஏற்கனவே அதிருப்திக் கொடியைத் தூக்கி விட்டனர்.

அந்த பதினொரு கட்சிகளில் இரண்டு கட்சிகளின் தலைவர்களே அமைச்சரவையில் இருந்து விலக்கப்பட்டிருக்கின்றார்கள். மூன்றாவது பிரமுகரான வாசுதேவ வெளியேற ஆயத்தமாக மூடை முடிச்சுகளைக் கட்டி விட்டார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இந்த நடவடிக்கை பதினொரு கட்சிகளின் அதிருப்திக் கூட்டணிக்குள் பிளவை ஏற்படுத்துமா அல்லது அதிருப்திப் போக்கைத் தீவிரப்படுத்துமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

ஏற்கனவே அதிருப்திக் கூட்டுக்குள் கெம்பிக் கொண்டு நின்ற சு.க. தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சு.க செயலாளர் தயாசிறி ஜயசேகரா போன்ற எம்.பிமார், இந்த இரு அமைச்சர்களையும் பதவி நீக்கிய அதிரடி நடவடிக்கையைப் பார்த்து வாயடைத்து அடங்கி விடுவரா, அல்லது தங்களது அதிருப்தி அணிக்கு இந்த இருவரும் அமைச்சர் பதவியை இழந்த வெறுப்போடு வருவது தங்களது தரப்பை பலமடையச் செய்வதாகக் கருதி உற்சாகமடைவரா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

அமைச்சரவையிலிருந்து நீக்கப்பட்ட வீமல் வீரவன்ஸவும் உதய கம்மன்பில்லவும் தங்கள் ஆட்டத்தை ஆரம்பித்து விட்டனர். கோட்டாபயவையும், பஸிலையும் இலக்கு வைத்துத் தங்கள் பிரசார பீரங்கியை முழங்கத் தொடங்கி விட்டார்கள். ஆரம்பமே இப்படி என்றால் இருவரும் எகிறும் போது நிலைமை படு சூடாகவே இருக்கும்.

இதில் விமல் வீரவன்ஸவுக்கும் அவரது மனைவிக்கும் எதிரான சில, பல வழக்குகள் நிலுவையில் உள்ளன. விமல் வீரவன்ஸ அதிகம் துள்ளிக் குதித்தால், இலங்கையின் அரசியல் போக்கின் வழக்கப்படி 'சட்டம் தன் கடமையைச் செய்யும்' என எதிர்பார்க்கலாம். பெரிய அரசியல் குழப்பம் ஏதும் பண்ணாமல், அமைச்சர் பதவி இல்லாவிட்டாலும், ஆளும் கூட்டமைப்புக்குள் தொடர்ந்து நீடிக்கும் பாணியில் விமல் வீரவன்ஸ அமுக்கி வாசிப்பாராயின் 'சட்டம் தன் வழமைப்படி தூங்கிக் கிடக்கும்.'

எது, எப்படி என்றாலும் இந்த விளைவுகளும், முரண்பாடுகளும் தனித்து நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை என்ற பலத்தை அரசிடமிருந்து வலுவாக இழக்கச் செய்து வருகின்றன என்பது கண்கூடு.

அதனால், கோட்டாபய அரசு தன்னிஷ்டப்படி நாட்டுக்கு புதிய அரசமைப்பு ஒன்றைக் கொண்டு வரும் வலுவையும் இழந்து வருகின்றது என்பது திண்ணம்.

அரசுத் தரப்பில் கணிசமானோரின் ஏக ஆதரவை அரசுத் தலைமை இழந்து வருகின்றமையால், இனி ஒரு புதிய அரசமைப்பை நிறைவேற்றுவதற்குத் தேவையான மூன்றில் இரண்டு பங்கு நாடாளுமன்றப் பெரும்பான்மையைப் பெறுவதாயின், குறைந்த பட்சம் எதிர்க்கட்சித் தரப்பில் உள்ள ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கட்சிகளினதும் முழு ஆதரவையாவது அதற்கு ஆளும் கூட்டமைப்பு பெற்றாக வேண்டும். இது புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் ஆளும் தரப்புக்கு 'செக்' வைக்கும் விடயமாக மாறியிருப்பது கவனித்தக்கது.

# மிகமோசமான நிலையில் நாட்டின் பொருளாதாரம்!

### சர்வதேச நாணய நிதியம் எச்சரிக்கை


பொதுக்கடன்களில் ஏற்பட்டிருக்கும் மிகையான அதிகரிப்பு, வெளிநாட்டுக் கையிருப்பு வீழ்ச்சி, எதிர்வரும் ஆண்டுகளுக்கான பாரிய நிதித் தேவை உள்ளடங்களாக இலங்கையின் பொருளாதாரம் தற்போது பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்திருப்பதாக சர்வதேச நாணய நிதியம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

எனவே, நுண்பாகப் பொருளாதார உறுதிப்பாடு மற்றும் கடன்களின் நிலைபேறானதன்மை ஆகியவற்றை அடைந்து கொள்வதற்கான செயற்றிறன் மிக்க பொறிமுறையொன்றை இலங்கை உடனடியாக நடைமுறைப்படுத்துவது அவசியம் என்றும் வலியுறுத்தியுள்ளது.

அத்துடன் கொவிட் வைரஸ் தொற்றுப் பரவலால் ஏற்பட்ட நெருக்கடி நிலைக்கு மத்தியில், நாட்டின் வெளிநாட்டுக் கையிருப்பு மட்டமும், பொதுக்கடன்களின் நிலைபேறான தன்மையும் மிகமோசமான நிலையை அடைந்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உக்ரைன் – ரஷ்ய போர் இலங்கைக்கு சாதகம்!

### உதயங்க வீரதுங்க கூறுகிறார்



ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையிலான யுத்தம் இலங்கைக்கு சாதகமாக அமைந்துள்ளது என ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார்.

இணைய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

ரஷ்ய சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான வெதுவெதுப்பான நீருடன் கூடிய கடல் இலங்கைக்கு நல்லதொரு சந்தர்ப்பம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். மின்சாரம் துண்டிக்கப்பட வேண்டும் என்று சுற்றுலாப் பயணிகள் விரும்புகின்ற னர் எனவும் அவர் கூறுகிறார்.

இதேவேளை, மூன்று சகோதரர்களும் நாட்டை ஆட்சி செய்யும் விதம் சரியானது எனவும் அதில் தவறில்லை எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# இத்தாலி வாழ் இலங்கையர்கள் அரசிடம் செய்துள்ள முறைப்பாடு



இத்தாலியில் வாழ்ந்து வரும் சுமார் பத்தாயிரம் இலங்கையர்கள் வீசா பெற்றுக் கொள்வதில் சிரமத்தை எதிர்கொள்கின்றனர் எனத் தெரிவித்து அரசாங்கத்திடம் மகஜரொன்றை ஒப்படைத்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில் -

தாம் வீசா பெற்றுக் கொள்வதில் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்க நேரிட்டுள்ளதாக இத்தாலி வாழ் இலங்கையர்கள் தெரிவித்துள்ளனர். இத்தாலியில் வாழ்ந்து வரும் பத்தாயிரம் இலங்கையர்களும் இந்த மகஜரில் கையொப்ப மிட்டுள்ளனர்.

ஜனாதிபதி, பிரதமர், வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்டவர்களிடம் இந்த மகஜர் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சினை தொடர்பில் வெளிவிவகார அமைச்சின் செயலாளர்களுடனும் பேச்சு நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# காச நோயினால் இதுவரை 47 பேர் மட்டக்களப்பில் பலி!

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 3 ஆண்டுகளில் காசநோய் காரணமாக 47 பேர் மரணித்துள்ளனர் எனவும், இந்தக் காலப்பகுதியில் 398 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் எனவும் மாவட்ட காசநோய் தடுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் கோணேஸ்வரன் ஆரணி தெரிவித்தார்.

2019ஆம் ஆண்டு 147 சேர்க்கப்பட்டு 17 பேர் மரணித்தனர் எனவும், 2020 இல் 127 பேர் சேர்க்கப்பட்டு 19 பேரும், 2021 இல் 124 பேர் சேர்க்கப்பட்டு 11 பேருமாக, 47 பேர் இறந்துள்ளனர்.

உலக காசநோய் தினத்தையொட்டி மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை நடத்திய காசநோய் விழிப்புணர்வு கருத்தரங்கில் கலந்துகொண்டு பேசும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் இ.உதயகுமார் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் பொது சுகாதார பரிசோதகர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

**➢ உங்களைப் பற்றிய அறிமுகம்**

நான் இப்ரா லெப்பே பாத்திமா கஷால். அக்கறைபத்துவில் வசித்து வருகிறேன். 9 ஆம் தரத்தில் பயிலும்போதே என்னிடமிருக்கும் சாதரண அழகுப்பொருட்களை கொண்டு மற்றவர்களை அழகுபடுத்துவேன். அழகுக்கலைத்துறை சார்ந்த புதிய விடயங்களை தேடிக் கற்றுக்கொண்டு என்னை நானே அழகுக்கலை நிபுணராக உருவாக்கிக் கொண்டேன். தற்போது எனக்கு வயது 21. Gazi's Beauty & Botique எனும் எனது சொந்த அழகுக்கலை நிலையத்தை நடாத்தி வருகிறேன். இதனை ஆரம்பித்து தற்போது இரண்டு வருடங்கள் பூர்த்தியாகி விட்டது. இந்த துறையை தேர்ந்தெடுத்ததிலிருந்து முழு முயற்சியோடு என் பணியை வாடிக்கையாளர் மன நிறைய செய்து வருகிறேன்.

**➢ அழகுக்கலைத் துறையில் எப்படி ஆர்வம் வந்தது?**

என்னுடைய பள்ளிப்பருவத்தில் அழகுக் கலைத்துறை தொடர்பான youtube காணொலிகள், தொலைக்காட்சி நிகழ்வுகள் என்பவற்றை பார்த்து அழகுக்கலைத்துறையில் என்னை அறியாமலேயே ஒரு ஆர்வம் வரத் தொடங்கியது. அதிலும் இந்த துறையில் பிரபலமாக வெற்றிகரமாக சாதித்துக் கொண்டிருக்கும் அழகுக்கலை நிபுணர்கள் எத்தனையோ பேரை நான் சந்தித்திருக்கிறேன். இத்துறைக்குள் என்னை முழுமையாக ஈடுபடுத்தினால் அவர்களைப் போன்றே நானும் உயர்ந்த நிலைக்கு வருவேன் என்பது என்னுடைய நம்பிக்கை. இந்த நம்பிக்கை தான் அழகுக்கலைத்துறையில் நான் கொண்டிருந்த ஆர்வத்தை அதிகரித்தது.



பாத்திமா கஷாலி
உரிமையாளர்
Gazi's Beauty & Botique
அழகுக்கலை நிறுவனம்

என் முதல் சாதனையே அழகுக்கலைத்துறையில் நான் கால் பதித்தமை தான். ஏனெனில் எத்தனையோ பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து தற்போது இந்த இடத்தில் இருக்கிறேன். எனது அழகுக் கலைத்துறை கற்கையின் இறுதி கற்கையின் போது நடைபெற்ற பயிற்சிப்போட்டியில் என்னுடைய அழகுக்கலைத் திறமையை காண்பித்து மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டேன். இது கூட எனக்கு ஒரு படி உயரத்தை தந்ததென்றே கூறவேண்டும். அருந்ததி நிறுவனத்தின் மணப்பெண் அலங்கார காட்சியில் நானும் பங்குபற்றுவதற்கு என்னை தேர்ந்தெடுத்தமை கூட எனது திறமையின் அங்கீகாரமாகவே கருதுகிறேன். என் பெயரும் எனது அழகுக்கலை நிலையமும் என் பிரதேசத்தை தாண்டியும் அறியப்படுவதை நான் ஒரு சாதனையாகவே கருதுகிறேன்.

# "தடைகள் பல வரலாம். தட்டிப்பறிக்கும் கூட்டமும் வரலாம். எதைக் கண்டும் அஞ்சாமல் துணிந்து நில்லுங்கள்..!"

**Gazi's Beauty & Botique அழகுக்கலை நிறுவனத்தின் உரிமையாளர் பாத்திமா கஷாலினுடனான நேர்காணலிது.**

**➢ இத்துறையில் நீங்கள் எதிர்நோக்கும் சவால்கள் என்ன?**

அழகுக்கலைக்கான கேள்வி ஆரம்ப காலங்களில் மிகஅரிதாகவே இருந்துவந்தது. ஆனால் தற்போது போட்டிகள் அதிகரித்து விட்டது. என்னைப் போன்ற பல பெண்கள் அழகுக்கலைத்துறையை கற்று அழகுக்கலை நிலையங்களை நடாத்தி வருகின்றனர். ஆகவே போட்டி நிறைந்த அழகுக்கலைத்துறையில் நாமும் முன்னே வருவது சவால் ஒன்றுதான். என்னிடம் வரும் வாடிக்கையாளர்கள் ஒவ்வொரும் ஒவ்வொரு விதமானவர்கள். அவர்களின் ரசணைகள் மாறுபட்டதொன்று. இப்படியிருக்க என்னை நம்பி வரும் வாடிக்கையாளர்களின் ரசணையை படித்து சிறந்தசேவையை வழங்கி அவர்களை மகிழ்விப்பதும் எனக்கு அன்றாடம் நிகழும் சவால் ஒன்றே. அதிலும் நான் ஒரு இஸ்லாமிய பெண். நான் வாழ்ந்து கொண்டிருப்பதொரு இஸ்லாமிய சமூகத்தில். அப்படியிருக்க இந்த துறையை நான் தேரந்தெடுத்து அதில் வெற்றி பெருவதையும் ஒரு சவாலாகவே நினைக்கின்றேன்.

**➢ அழகுக்கலைத்துறையில் உங்களுக்கு கிடைத்த வாய்ப்புகளும் நீங்கள் அடைந்த சாதனைகளையும் பற்றி ஒரு சில..**

அழகுக்கலைத்துறையை பொருத்தவரையில் மற்றவர்களை அழகுப்படுத்தி அதன் மூலம் நாங்கள் பிரசித்து பெருவது தான் உண்மையான வெற்றி. எனக்கு புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பது கூட நண்பர்கள், உறவினர்கள், அயலவர்கள் மற்றும் எனது சிறப்பு வாடிக்கையாளர்கள் மூலம் தான். நாம் பிரசித்து பெறுவதற்கு எத்தனையோ தளங்களைப் பயன்படுத்தலாம். அதிலும் குறிப்பாக சமூக வலைத்தளங்கள். ஆனால் என்னைப் போன்ற இஸ்லாமியப் பெண்களுக்கு சமூக வலைத்தளங்களை ஒரு தளமாகப் பயன்படுத்துவது கட்டுப்பாடுகளுக்கு அமைவானது. அப்படியிருக்க எனது திற மையை காட்ட எனக்கொரு மிகப்பெரிய தளத்தை அருந்ததி நிறுவனம் அமைத் துக்கொடுத்திருக்கிறது. மணப்பெண் அலங் காரத்தில் நானும் பங்குபற்றி என் திறமையை வெளிகாட்ட எனக்கொரு வாய்ப்பு இது.அழகுக் கலைத்துறையில் சாதிக்கவேண்டுமென்பதில் நானும் உறுதியாக இருக்கிறேன்.அப் படியிருக்க

**➢ சாதிக்க நினைக்கும் பெண்களுக்கு நீங்கள் கூற நினைப்பது.**

பெண்கள் ஒவ்வொருவரும் அவர்களுக் கென்ற ஒரு தனியடையாத்தை உரு வாக்க வேண்டும். எத்தனை போராட்டங் களும்,அவமானங்களும்,தடைகளும் வந்தாலும் கூட பெண்கள் தைரியமாக அனைத்தையும் எதிர்கொள்ள தயாராக வேண்டும். எதைப் பற்றியும் சிந்திக்காமல் என்னால் முடியும் நானும் சாதிப்பேன் என்று பெண்களாகிய நீங்கள் ஒவ்வொருவரும் சிந்திக்கவேண்டும். எந்தத்துறையானாலும் சரி தைரியமாக முன்னாடி வந்து என்னால் இதை சாதித்துகாட்டமுடியுமென்று நினைக்கவேண்டும்.தடைகள் பல வரலாம். தட்டிப்பறிக்கும் கூட்டமும் வரலாம். எதைக் கண்டும் அஞ்சாமல் துணிந்து நில்லுங்கள். முன்வைத்த காலை பின்வைக்காதீர்கள். நீங்கள் எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியும் வெற்றியின் படிகள் தான். திறமைகளை உள்ளுக்குள்ளேயே போட்டு வைத்து முடங்கி கிடக்காமல் உங்கள் திறமைகளை வெளியுலகிற்கு காட்டுங்கள். இந்த வாழ்க்கை உங்களுடையது.ஒரு பெண் தானே என்று இழிவாய் நினைக்கும் சமுதாயத்திற்கு முன்னால் ஆமாம் பெண்தான் இதைச் செய்தேன் என்று சாதித்துகாட்டுங்கள்.



காலைக்கதிர் Kalaikkathir

# விமல் வீரவன்ஸவையும் கம்மன் பிலவையும் தென்னம் மட்டையில் வெட்டி சாய்க்கலாம்!

## அமைச்சர் ரோஹித்த அபேகுணவர்தன சண்டித்தனம்



விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில போன்ற தலைவர்களை தென்னம் மட்டையில் கூட வெட்டி சாய்க்க முடியும் என அமைச்சர் ரோஹித்த அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

வீரவன்ஸ மற்றும் கம்மன்பில ஆகியோர் அமைச்சுப் பதவிகளில் இருந்து நீக்கப்பட்ட பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

விமல் வீரவன்ஸ ஏன் குழம்பிய குட்டையில் மீன்பிடிக்கப் பார்க்கின்றார்?. அடுத்த தேர்தலில் எந்த அணியில் இணைந்து தேர்தலில் போட்டியிடலாம் என்பதற்காக அவர் இதனைச் செய்கின்றார்.

இவர்களுக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவே மேடையை அமைத்துக் கொடுத்தது. அரசாங்கத்துடன் இருக்க முடியாது என்றால், விலகலாம். வீரவன்ஸ, கம்மன்பில போன்றவர்களை தென்னம் மட்டையில் வெட்டி சாய்க்க முடியும்.

பலவந்தமாக இவர்களை வைத்துக் கொண்டு பாலுட்டும் தேவை எமக்கில்லை. இவர்களைப் போன்ற வெற்று வீரர்கள் எங்குமில்லை. இவர்கள் மைக் டைசன்கள். அதுதான் உண்மை.

இவர்கள் உடம்பில் இருந்துக் கொண்டு காதைகடிக்கும்வேலையை செய்தனர். உதய கம்மன்பிலவுக்கு துறை சார்ந்த அமைச்சர் என்ற வகையில் எரிபொருளை இறக்குமதி செய்து வழங்கத் தெரிந்திருக்க வேண்டும்.

மக்கள் எரிபொருளைக் கொள்வனவு செய்ய வரிசைகளில் நிற்கும் போது அவருக்கு பொறுப்பில்லையாம். எரிசக்தி அமைச்சரே எரிபொருள் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும். அப்படி செய்ய முடியாவிட்டால், எரிசக்தி அமைச்சர் பதவி எதற்கு தேங்காய் துருவவா? என ரோஹித்த அபேகுணவர்தன கேள்வி எழுப்பியுள்ளார்.



# புதிய அமெரிக்கத் தூதரை சந்தித்து பேசினார் பஸில்!

இலங்கைக்கான புதிய அமெரிக்க தூதுவர் ஜூலி ஜே.சுங்கை நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ சந்தித்து பேசியுள்ளார்.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை, நெருக்கடியைத் தீர்ப்பதற்கான வழிமுறைகள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சந்திப்பின் பின்னர் அமெரிக்க தூதுவர் தனது டுவிட்டரில் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

# மற்றொரு டீசல் தாங்கிக் கப்பல் நேற்று நாட்டை வந்தடைந்தது!

28 ஆயிரத்து 300 மெற்றிக் தொன் டீசல் தாங்கிய கப்பலொன்று, நேற்று (வெள்ளிக்கிழமை) நாட்டை வந்தடைந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், வியாழக்கிழமை 37 ஆயிரத்து 300 மெற்றிக் தொன் டீசல் தாங்கிய கப்பல் நாட்டை வந்தடைந்துள்ளது.

டீசலை, நேற்று முத்துராஜவளை களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

இதையடுத்து, நாட்டில் நிலவும் டீசல் தட்டுப்பாடு முடிவுக்கு வரும் என அந்த அமைச்சு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

# நிலையான வைப்பு வசதி வீதம் அதிகரிக்க மத்தியவங்கி முடிவு

நிலையான வைப்பு வசதி வீதம் மற்றும் நிலையான கடன் வசதி வீதத்தை அதிகரிக்க இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

இதன்படி, நிலையான வைப்புத்தொகை வசதி 6.5 சதவீதமாகவும், நிலையான கடன் வசதி 7.5 சதவீதமாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார நடவடிக்கைகளில் தொடரும் தடைகளைக் கவனத்தில் கொண்டு நேற்றைய தினம் நடைபெற்ற மத்திய வங்கியின் நாணய சபைக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



# விமல், கம்மன்பில பதவி பறிப்பு மிகவும் அநீதியான விடயமாகும்

## வாசுதேவ காட்டம்

விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோர் அமைச்சரவையில் இருந்து நீக்கப்பட்டமை பெரும் அநீதியான விடயம் என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அத்துடன், தான் வகிக்கும் அமைச்சு பதவி தொடர்பில் கட்சியின் செயற்குழு தீர்மானமொன்றை எடுக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

விமல், கம்மன்பில ஆகியோரின் கூட்டணியில் வாசுவும் இடம்பெற்றிருந்தார். எனினும், அவரின் பதவி பறிக்கப்படவில்லை.

இந்த நிலையில் இது தமது அணியை பிளவுபடுத்தும் செயல் என கம்மன்பில சுட்டிக்காட்டியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# விவசாயிகளுக்குத் தேவையான எரிபொருளை உடனடியாக வழங்குமாறு பணிப்புரை விடுப்பு

எரிபொருள் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்குத் தேவையான எரிபொருளை உடனடியாக வழங்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனத்துக்கு விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே இவ்வாறு பணிப்புரை விடுத்துள்ளார்.

அநுராதபுரம், அம்பாறை, பொலன்னறுவை, குருநாகல், மொனராகலை உள்ளிட்ட மாவட்டங்களில் பெரும்போக நெல் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, நெல் அறுவடை செய்யும் விவசாயிகள் எரிபொருளைப் பெறுவதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என விவசாயிகள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

இந்த நிலையிலேயே, விவசாயிகளுக்கு எரிபொருளை உடனடியாக வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் தலைவருக்கு விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே பணிப்புரை விடுத்துள்ளார்.

# ஜனாதிபதியின் தன்னிச்சையான முடிவால் ரத்நாயக்கவும் பதவி விலகத் தீர்மானம்?

அமைச்சர் சிபி ரத்நாயக்க பதவி விலக தீர்மானித்துள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பில் அவர் இறுதி முடிவை எடுப்பார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமைச்சரவை மறுசீரமைப்பின்போது தனக்கு வேலை செய்யக்கூடிய அமைச்சு பதவி கிடைக்கும் என அமைச்சர் சிபி ரத்நாயக்க நம்பினார் எனவும் கூறப்படுகின்றது.

எனினும், அது இடம்பெறாத நிலையிலேயே பதவி விலகத் தீர்மானித்துள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.



நுவரெலியா மாவட்டத்தில், தனக்கு எதிரானவர் எனக் கருதப்படும் எஸ்.பிக்கு முக்கிய அமைச்சு பதவி வழங்கப்பட்டமையும், அவரின் அதிருப்திக்குக் காரணமாக அமைந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

'கம்பவாரிதி' இலங்கை ஜெயராஜ் தமது 'உகரம்' இணையத்தளத்தில் 'பாட்டும் நானே! பாவமும் நானே!' என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி - பதில் பகுதி 'காலைக்கதிர்' நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்குத் தீனியாகிறது.

# பாட்டும் நானே? பாவமும் நானே!




**1. கேள்வி:-** திருக்கேதீஸ்வரத்தில் கிறிஸ்தவர்கள் திட்டமிட்டு மதப்பகையை வளர்ப்பது பற்றி சென்ற வாரம் எழுதியிருந்தீர்கள். இதனால் அவர்களுக்கு என்னதான் லாபம் விளையப்போகிறது? திரும்பத் திரும்ப இங்கு மதப்பகையூட்டும் இவர்களது மோசமான செயல்களை தமிழினத் தலைவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் நம் தலைவர்கள் யாரும் கண்டிக்க மாட்டார்களா? இந்து மதத்தினரின் பொறுமையை இயலாமை என்று இவர்கள் நினைக்கிறார்களா?

**பதில்:-** அதுதான் எனக்கும் புரியவில்லை! மத சமரசம் பேசும் இடங்களிலெல்லாம் கிறிஸ்தவ மதகுருமார்கள் சாத்வீக முகத்தோடு வந்து கலந்து கொள்கிறார்கள். அநியாயங்கள் நடக்கும் இடங்களிலெல்லாம் தாங்கள் அதற்கு எதிரானவர்கள் என்பது போல் தோற்றம் காட்டி எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். இதெல்லாம் அவர்களது ஒரு முகம்தான். அவர்களுக்கு மற்றொரு முகமும் இருப்பது போல் தோன்றுகிறது. அந்த முகத்தின் வேலைதான் திருக்கேதீஸ்வரத்தில் நடந்து கொண்டிருக்கிறது போல.

மதமாற்றத்தின் மூலம் மக்களைக் கைப்பற்றுவதும் பிரதேசங்களைத் தமதாக்க முயல்வதுமான இழி செயல்கள், இவர்களிடம் இருந்துதானா பிறக்கின்றன? என்று ஆச்சரியமாய் இருக்கிறது. ஒரு பிரதேசத்தில் தாம் பலம் பெறும்வரை தேவ முகம்காட்டி நிற்கும் இவர்கள், அங்கு ஓரளவு பலம் பெற்றதும் சைத்தான் முகம்காட்டி இயங்கத் தொடங்கி விடுகிறார்கள்.

நடந்து முடிந்த ஏப்ரல் குண்டுவெடிப்பில் தமக்கு ஏற்பட்ட அநியாயத்தை, பேரினவாதிகள் இனங்கண்டு கொள்ளாமல் இருக்கிறார்கள் என்பதற்காக நீதிகேட்டு ஐ.நா.மனித உரிமைகள் சபை வரை கொழும்புப் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை சென்றிருக்கிறார். அங்ஙனம் நீதி கோருகிறவர்கள் மற்றவர்களுக்குத் தாம் அநீதி விளைவிக்கக்கூடாது என்பதை மறப்பது ஏன் என்றுதான் புரியவில்லை. தெற்கில் பெரும்பான்மை பெற்றிருக்கும் இனத்தார், சிறுபான்மையினரான தமக்கு அநீதி செய்ததைப் பொறுக்க முடியாத இவர்கள், சிறுபான்மையாய் வடக்கில் தாம் இருந்துகொண்டு, பெரும்பான்மையினரான இந்து மதத்தினருக்கு எதிராக செயல்படுவதன் தவறை உணராமல் இருப்பது ஆச்சரியமே!

ஒட்டுமொத்தக் கிறிஸ்தவர்களையும் நான் குற்றஞ் சாட்டவில்லை. இயேசுபிரான் காட்டிய வழியில் நடக்கும் உயர்ந்த கிறிஸ்தவர்கள் பலர் இன்றும் இருக்கிறார்கள். அவர்களும் ஏன் இப்பிழையைக் கண்ட பிறகும் மௌனித்து இருக்கிறார்கள் என்பதுதான் தெரியவில்லை.

தலைவர்கள் ஏன் கண்டிக்கிறார்கள் இல்லை என்றா கேட்டீர்கள்? அவர்களுக்குத் தேர்தலில் விழப் போகும் வாக்குகள் முக்கியமே தவிர நீதி முக்கியமில்லை. இந்தப் பிரச்சினையால் வருங்காலத்தில் தமிழினம் பிளவுபடப்போகும் ஆபத்தை உணரும் அளவுக்கு அவர்களுக்குத் தீர்க்கதரிசனம் இருக்கும் என்று எதிர்பார்ப்பது நம் தவறுதான்.

ஒன்றை மட்டும் சொல்லி முடிக்கிறேன். இந்துமதத்தினர் காவாலிகளை நம்புகிறவர்கள் அல்லர். கடவுளை நம்புகிறவர்கள். அதனால்தான் பொறுமையுடன் இருக்கிறார்கள்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ கடவுள் பாதி, மிருகம் பாதி கலந்து செய்த மனிதர்கள். ஹி..ஹி.. பரமபிதாவே இந்தப் பாவியை மன்னிப்பீராக!**

**2. கேள்வி:-** ஜனாதிபதி அலுவலகத்தின் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்திய கூட்டமைப்பினரை ஜனாதிபதி சந்திக்க மறுத்தமை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில் :-** எனக்கென்னவோ அதில் தவறில்லை என்றுதான் தோன்றுகிறது. ஆர்ப்பாட்ட அறிவிப்பும் சந்திக்கும் கோரிக்கையும் முன்னரே தெரிவிக்கப்பட்டிருக்க வேண்டும். திடீரென ஒரு ஜனாதிபதியின் அலுவலக வாசலில் ஆர்ப்பாட்டம் செய்துவிட்டு, உடனேயே ஜனாதிபதியைச் சந்திக்கவேண்டுமென பிடிவாதம் பிடித்தது நியாயமான செயல் என்று தோன்றவில்லை.

முன் அறிவித்தல் கொடுத்திருந்தால் மட்டும் ஜனாதிபதி இவர்களை சந்தித்திருப்பாரா என்பது வேறுவிடயம். இவர்கள் தவறிழைத்ததால் சாட்டுச்சொல்ல அவர்களுக்கு வாய்ப்பளித்துவிட்டார்கள். அதைத் தவிர்த்திருக்கலாம்.



**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ சந்திப்போமா இனிச் சந்திப்போமா தனிமையில் நம்மைப் பற்றிச் சிந்திப்போமா ஹி.. ஹி..!**

**3. கேள்வி:-** மீனவர்களின் போராட்டத்தில் கூட்டமைப்பினரும் வேறு சில கட்சிகளும் அமைச்சர் டக்ளஸைக் கடுமையாய்ச் சாடுகின்றனர். தொப்புள்க்கொடி உறவுள்ள இந்திய, இலங்கைத் தமிழ் மீனவர்களுக்கிடையே அமைச்சர் பகை மூட்டப்பார்க்கிறார் என்றும் கூட அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர். அதுபற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

**பதில் :-** சும்மா இருக்க முடியாமல் என் வாயைக் கிளறி என்னைச் சிக்கலில் மாட்டப் பார்க்கிறீர்கள். அமைச்சர் செய்வது சரியென்று சொன்னால் கூட்டமைப்பினர் என்னோடு கோபிக்கப் போகிறார்கள். கூட்டமைப்பினர் சொல்வது சரியென்று சொன்னால் அமைச்சர் என்னோடு கோபிக்கப் போகிறார். ஆனால் இவர்களுக்குப் பயந்து நான் உண்மையைச் சொல்லத் தயங்க மாட்டேன்.

முதலில் பிரச்சினையின் வேரைத் தெரிந்து கொள்ளவேண்டும். தமிழ்நாட்டு மீனவர்களில், கடலில் இறங்கி தொழில் செய்யும் ஏழை மீனவர்கள் என்றும் அவர்களை வைத்துப் பெரும் பொருள் சம்பாதிக்கும் மீனவ முதலாளிமார் என்றும் இரு வகைப்பட்டவர்கள் இருக்கிறார்கள். அந்த பெரிய லாபம் தேடும் முதலாளிமாரின் நெருக்குதலின் பேரில்த்தான் ஏழை மீனவத் தொழிலாளிகள் இலங்கைக் கடலுக்குள் நுழைகிறார்கள். இங்கே கைது செய்யப்படுகிறவர்கள் அந்த ஏழை மீனவத் தொழிலாளிகள்தான். அக்குற்றத்திற்குக் காரணமான முதலாளிமார்கள் அங்கேயே பத்திரமாக இருக்கிறார்கள்.

கடந்த சில தசாப்தங்களாக இங்கே போர் நடந்த சூழலைப் பயன்படுத்தி நம் கடல் வளத்தை அள்ளிச் சென்று பழகிய அவர்கள் போர் முடிந்த பின்பும் அந்தப் பழக்கத்தைக் கைவிட மறுக்கிறார்கள். பலகால இழப்புகளுக்குப் பின்பு இப்போதுதான் நமது மீனவர்களுக்கு ஓரளவு வாழ்க்கைப் பாதை திறந்திருக்கிறது. அப்படியிருக்க அவர்களின் வருமானத்தில் மண்ணைப் போட நினைக்கும் தமிழ்நாட்டு மீனவ முதலாளிகளின் செயல் கண்டிக்கத்தக்கது என்பதில் எந்த ஐயமும் இல்லை.

இங்குள்ள மீன்வளத்தை அள்ளிக் கொண்டு போவதால், இலாபம் அடைவது அங்கிருக்கும் முதலாளிகள்தான். அகப்பட்டுக் கஷ்டப்படுவதோ கட்டாயத்தின் பேரில் இங்கு வரும் மீனவத்தொழிலாளிகளேயாம். இதுதான் பிரச்சினை.

இவ் உண்மை தெரிவதால்தான், வெறும் கருவிகளாய்ச் செயற்படும் தமிழ்நாட்டு மீனவர்களைக் கைது செய்தாலும் மன்னித்துத் திருப்பி அனுப்ப வேண்டியிருக்கிறது. அப்படியானால் இந்தப் பிரச்சினைக்கு முடிவேயில்லையா என்று கேள்வி பிறக்கும். இல்லை என்பதுதான் உண்மையான பதில். காரணம், இந்திய மத்திய, மாநில அரசுகள் தேர்தல் காலத்தில் தமக்கு கைகொடுக்கக் கூடிய முதலாளிமாரை வெளிப்படையாகக் காட்டிக் கொடுக்கத் தயாராகவில்லை.

இந்திய அரசின் பிராந்திய வலிமை கருதியும் நடப்பது தமிழர்களுக்கான நஷ்டம்தானே என்பதாலும் நம் நாடும் இப்பிரச்சினையைப் பெரிதுபடுத்த விரும்பவில்லை. ஒரு நாட்டின் இறையாண்மை என்பதெல்லாம் வெறும் பெயருக்குத்தான். வல்லவன் வகுத்ததுதான் சட்டம் என்பதுதான் உலகளாவிய உண்மைநிலை. அதனால் யார் வந்தாலும் இந்தப் பிரச்சினை இப்படியேதான் இருக்கப்போகிறது.

அமைச்சர் டக்ளஸ் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க ஒரு புதுவழி கண்டுபிடித்திருக்கிறார். பிடிபடுகிற கைக்கூலிகளான ஏழை மீனவர்களை விட்டுவிட்டு, அவர்கள் கொண்டு வரும் முதலாளிமாரின் பெரும் படகுகளைக் கைப்பற்றி, அவற்றை ஏலம் விட்டு அதில் வரும் பணத்தை நம் மீனவர்களுக்காய்ப் பயன்படுத்த நினைக்கிறார் அவர். இதுதான் அமைச்சர் இப்பிரச்சினைக்குக் கண்டு பிடித்து இருக்கும் புதிய தீர்வு. இதுவும் எத்தனை நாளுக்கோ? இந்தியா காதை முறுக்கினால் அந்தத் தீர்வு முயற்சியும் இடைநிற்கும் என்பதில் ஐயமில்லை.

(11ஆம் பக்கம் பார்க்க)

# மத்திய கலாசார நிதியத்தின் வரைவு விதிகள் பிரதமரிடம்!



1980 ஆம் ஆண்டு 57 ஆம் இலக்க மத்திய கலாசார நிதியச் சட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்படவுள்ள வரைவு விதிகள், குழுவின் தலைவர் ஜி.எல்.டபிள்யூ.சமரசிங்க உள்ளிட்ட குழு உறுப்பினர்களினால அலரிமாளிகையில் வைத்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப் பட்டது.

புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷவின் பணிப்புரையின் பேரில் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தனவால் 2020 செப்ரெம்பர் 16 ஆம் திகதி இந்தக் குழு நியமிக்கப்பட்டது.

கடந்த அரசாங்கத்தின் போது இந்த விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரால் பாரியளவில் நிதி துஷ்பிரயோகம் இடம்பெற்றமை போன்ற நிதி மோசடிகள் மேலும் இடம்பெறுவதைத் தடுப்பதற்கு இந்த விதிகளை அறிமுகப்படுத்துவது மிகவும் அவசியமானது என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார்.

விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் விருப்பத்துக்கேற்ப பணம் செலவழிப்பதை மட்டுப்படுத்துவதற்கான முறைமையொன்றை உருவாக்குவது நாட்டுக்கு நன்மை பயக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

பிரதமரின் ஆலோசகர் (பொது உறவுகள்) ஜி.எல். டபிள்யூ.சமரசிங்க இந்தக் குழுவின் தலைவராக விளங்குவதுடன், புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் விஜித நந்த குமார, சட்டத்தரணி கணேஷ் தர்மவர்தன மற்றும் மத்திய கலாசார நிதியத்தின் பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் மனித அபிவிருத்தி) டபிள்யூ. தர்மதாஸ ஆகியோர் இந்தக் குழுவின் ஏனைய உறுப்பினர்களாகக் காணப்படுகின்றனர்.

மத்திய கலாசார நிதியம் ஸ்தாபிக்கப்பட்டது முதல் இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட விதம் மற்றும் அதன் கீழ் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் மற்றும் ஒழுங்குமுறைகள் மற்றும் அதற்கு இணையாகச் செயற்படும் தொல்பொருள் திணைக்களத்தின் தொடர்புடைய சட்டங்கள் மற்றும் விதிகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு இந்த வரைவு விதிகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

தொல்பொருள் ஆணையாளர் நாயகம் பேராசிரியர் அனுர மனதுங்க, தொல்பொருள் திணைக்களத்தின் முன்னாள் ஆணையாளர் நாயகம் பேராசிரியர் செனரத் திஸாநாயக்க, உலக பாரம்பரிய சர்வதேச ஆலோசகர் கலாநிதி காமினி விஜேசூரிய, முன்னாள் தொல்பொருள் ஆணையாளர் கலாநிதி நிமல் பெரேரா மற்றும் வீடமைப்பு அமைச்சின் ஓய்வுபெற்ற சிரேஷ்ட உதவிச் செயலாளர் நந்தனி பெர்னாண்டோ ஆகியோர் இதற்கு விசேட ஒத்துழைப்பு நல்கியுள்ளனர்.

நிதி மற்றும் பிற விடயங்கள் தொடர்பாகச் செயற்படும்போது அதன் பணிப்பாளர் நாயகம் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரிக்கு உதவியாக பணிப்பாளர் நாயகத்தின் பரிந்துரையின் பேரில் தலைமை நிர்வாக அதிகாரியால் ஒரு நிபுணர் குழு நியமிக்கப்படும். அது அவ்வப்போது பரிசீலனை செய்யப்பட்டு, திருத்தங்கள் தேவைப்பட்டால் அவ்வாறு செய்வதற்கான தலைமை நிர்வாக அதிகாரிக்கான அதிகாரம் உள்ளிட்ட 16 முக்கிய விதிகள் இந்த வரைவில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்தச் சந்தர்ப்பத்தில் பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க, புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தன, குழுத் தலைவர் பிரதமரின் ஆலோசகர் (பொது உறவுகள்) ஜி.எல்.டபிள்யூ.சமரசிங்க உள்ளிட்ட குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## சாதாரன தரம் சித்திபெறாதோருக்கு தொழிற்பயிற்சி நடத்தத் தீர்மானம்!

2020 ஆம் ஆண்டு கல்விப் பொது தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைவாக, உயர்தரத்துக்குத் தகுதிபெறத் தவறிய மாணவர்களை, தொழில் பயிற்சிகளில் ஈடுபடுத்தி தொழிலில் ஈடுபடுத்துவதற்கான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் மனித வள மற்றும் தொழில் பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அனுஷா கோகுல இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

2020 ஆம் ஆண்டில் கல்விப் பொது தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில், உயர்தரத்துக்குத் தகுதி பெறாதோரின் எண்ணிக்கை 98 ஆயிரத்துக்கும் மேற்பட்டதாகும். இதில் கணித பாடத்தில் சித்தி எய்தத் தவறியமை இருப்பினும் பின்னர் சித்தி எய்தியமை அடிப்படையில் கல்வி பொது தராதர உயர்தர மாணவர்களைத் தவிர்ந்த ஏனையவர்களை இலக்காக கொண்டு இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இந்த வேலைத்திட்டம் 2 கட்டங்களின் கீழ் முன்னெடுக்கப்படவுள்ளது. முதலாவது கட்டத்தின் கீழ் தற்போதைய நோக்கத்துக்கு உட்பட்ட மாணவர்களை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்படுவதாகப் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார்.

இரண்டாவது கட்டத்தின் கீழ் தொழில் பயிற்சியில் ஈடுபட்டுள்ள, இளைஞர் சேவை மற்றும் தேசிய இளைஞர் படையணியில் ஈடுபட்டுள்ள மற்றும் தொழிலில் ஈடுபட்டுள்ள மாணவர்களை இலக்காகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

சம்பந்தப்பட்ட மாணவர்கள் பிரதேச செயலாளர் மட்டத்தில் அடையாளம் காணப்பட்டு அவர்களது திறன் ஆற்றல்களுக்கு அமைவாக தொழில் பயிற்சிகளில் ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இவர்கள் பிரதேச தொழில் வழிகாட்டி ஆலோசனை அதிகாரிகள் மற்றும் மனிதவள அதிகாரிகளை சந்தித்துத் தமது தகவல்களை வழங்க முடியும். வேலைத்திட்டம் தொடர்பான தகவல்களை www.done.gov.lk இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

இந்த வேலைத்திட்டத்தில் அனைத்து சேவைகளும் இலவசமாக வழங்கப்படும். மாணவர்களுக்கு ஒரு வருட காலத்திற்குள் NVQ தரத்தை அடையக் கூடியதாக இருக்கும் என்றும் பணிப்பாளர் நாயகம் அனுஷா கோகுல தெரிவித்தார்.

இலங்கை தொழில் வாய்ப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் எஸ்.கே. டபிள்யூ சிசர குமாரவும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டார்.

## றாகம மருத்துவ பீட விடுதி மோதல் அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிப்பு

### அருந்திக குற்றமற்றவராம்



றாகம மருத்துவ பீட விடுதி வளாகத்தில் இரண்டு மாணவர் குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பான அறிக்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் பெப்ரவரி முதலாம் திகதி இரவு றாகம மருத்துவ பீடத்தின் விடுதி வளாகத்தில் இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தலைமையில் குழுவொன்றை ஜனாதிபதி நியமித்தார்.

அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் ரமேஷ் பத்திரண ஆகியோர் குழுவின் ஏனைய உறுப்பினர்களாக இருந்தனர்.

இந்த சம்பவத்துடன் முன்னாள் இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோவுக்கு எந்தவிதமான தொடர்பும் இல்லை என விசாரணையில் தெரியவந்துள்ளது.

பாரபட்சமின்றி சட்டத்தை அமுல்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தையும் அவர் வழங்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து உண்மைகளையும் கருத்தில் கொண்டு முன்னாள் இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ குற்றமற்றவர் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நௌபர் மௌலவிக்கு எதிரானவழக்கு மே 12 இல் வருகிறது விசாரணைக்கு!

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள சந்தேக நபர்களுக்கு எதிரான வழக்கை மே 12 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு உறுதுணையாக இருந்ததாக குற்றம் சாட்டப்பட்ட மொஹமட் இப்ராஹிம் மொஹமட் நௌபர் என்ற நௌபர் மௌலவி உட்பட 25 சந்தேக நபர்களுக்கு எதிராக இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கு எதிர்வரும் மே மாதம் 12 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளதுடன் அன்றைய தினம் வரையில் சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

## வவுனியாப் பல்கலைக்கழகமும் பட்டய பணியாளர் மேலாண்மை நிறுவனமும் புரிந்துணர்வு ஒப்பந்தம்




வவுனியாப் பல்கலைக்கழகத்தின் வணிக கற்கைகள் பீடத்தின் மனிதவள முகாமைத்துவத்துறை மற்றும் பட்டய பணியாளர் மேலாண்மை நிறுவனம் என்பவற்றுக்கிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இந்த நிகழ்வு வவுனியா பல்கலைக்கழக வணிக கற்கைகள் பீடத்தில் இடம்பெற்றிருந்த நிலையில் வவுனியாப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் கலாநிதி த.மங்களேஸ்வரன், வணிக கற்கைகள் பீடாதிபதி கலாநிதி வை. நந்தகோபன், மனிதவள முகாமைத்துவ துறையின் தலைவர் எஸ்.ஹரிகரன் ஆகியோர் வவுனியா பல்கலைக்கழகத்தை பிரதிநிதித்துவப்படுத்தியமையுடன் ஜயந்த அபேரத்ன, சமன் ஜயவிக்ரம, வீரதுங்க ஆகியோர் பட்டய பணியாளர் மேலாண்மை நிறுவனத்தை பிரதிநிதித்துவப்படுத்தி புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். (100)

## உடனடியாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இருந்துகொண்டு அரசை விமர்சிப்பவர்கள் ஒன்றில் தாமாக உடனே வெளியேற வேண்டும். இல்லையேல் எனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி அவர்களை நானே வெளியேற்றுவேன்.

– இவ்வாறு கடும் தொனியில் எச்சரிக்கையுடன் வலியுறுத்தியுள்ளார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

சிரேஷ்ட அமைச்சர்களுடன் நடத்திய அவசர கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நான் 69 இலட்சம் மக்களின் ஆணையுடன்தான் ஆட்சி அதிகாரத்தைக் கையில் எடுத்தேன். எனக்கு ஆணை வழங்கிய மக்களை ஏமாற்றவும் மாட்டேன்; அவர்களுக்குத் துரோகம் செய்யவும் மாட்டேன்.

நாடு இன்று பொருளாதார ரீதியில் பெரும்சவால்களை எதிர்நோக்கியுள்ளது. இந்நிலையில், அமைச்சரவையில் இருக்கும் சிலர், பொறுப்பிழந்து, பதவி என்ற ஒன்றை மறந்து கீழ்த்தரமாகச் செயற்படுகின்றனர். அரசைக் கண்டபடி விமர்சிக்கின்றனர். இவர்களுக்கெல்லாம் அமைச்சுப் பதவி எதற்கு?

அரசை வீழ்த்துவதுதான் இவர்களின் நோக்கமாக இருந்தால் அது ஒருபோதும் சாத்தியமாகாது. எமது அரசை எவராலும் அசைக்கவே முடியாது – என்றார்.

---

## பஸிலின் ஜனாதிபதிக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இணைந்து கொழும்பில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே விமல் வீரவன்ஸ மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்த பின்னர், எதிர்க்கட்சித் தலைவர் பதவியை பஸில் ராஜபக்ஷ கோரினார். அதனை மஹிந்த வழங்கவில்லை. அதன்பின்னர் தனிக் கட்சியை உருவாக்கினார்.

2019 ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்தே அவர் செயற்பட்டார். அதற்கு நாம் இடமளிக்கவில்லை. மஹிந்த இல்லாவிட்டால், கோட்டாபய எனத் திட்டவட்டமாக அறிவித்தோம். அதனால் பஸிலின் கனவு தகர்ந்தது.

அதன்பின்னர் கிழக்குத் துறைமுக விவகாரம், யுகதனவி, 20 ஆவது திருத்தச்சட்டம்போன்றவற்றின்போதும் பஸிலின் முடிவுக்கு நாம் சவாலாக இருந்தோம்.

எங்களை வெளியேற்றாவிட்டால், அமைச்சரவைக்கு வரமாட்டேன் என அவர் கூறியுள்ளார். இதனால்தான் ஜனாதிபதி எம்மை நீக்கியுள்ளார். அதனால் நாம் கவலைப்படவில்லை. மக்கள் வழங்கிய ஆணையின் பிரகாரம் செயற்பட்டுள்ளோம் – என்றார்.

---

## சி.பிக்குக் கிடைத்தது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ராஜபக்ஷ முன்னிலையில், நேற்றுப் பகல், ஜனாதிபதி அலுவலகத்தில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டனர்.

இதேவேளை, தனது பதவியை இராஜிநாமா செய்த அருந்திக பெர்னாண்டோ, மீண்டும் இராஜாங்க அமைச்சராக நேற்றுப்பதவிப்பிரமாணம்செய்துகொண்டார்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ள அமைச்சுக்களின் நேற்றைய பதவிப் பிரமாண விவரம் வருமாறு:–

வனஜீவராசிகள் பாதுகாப்பு மற்றும் வன வளங்கள் அபிவிருத்தி அமைச்சராக சி.பி. ரத்நாயக்க பதவியேற்றார்.

(அவர் பற்றி முன்னர் வந்த செய்தி 6ஆம் பக்கத்தில்...)

இவர் முன்னதாக வனஜீவராசிகள் பாதுகாப்பு, யானை வேலிகள் மற்றும் அகழிகளை அமைத்தல் உள்ளிட்ட பாதுகாப்பு வேலைத்திட்டங்கள் மற்றும் காடுகளை மீண்டும் வளர்த்தல் மற்றும் வனவளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராகச் செயற்பட்டு வந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

போக்குவரத்து அமைச்சராக திலும் அமுனுகம ஜனாதிபதி முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் முன்னர் போக்குவரத்து இராஜாங்க அமைச்சராகச் செயற்பட்டு வந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தென்னை, கித்துள் மற்றும் பனை செய்கைகள் மேம்பாடு மற்றும் அவை சார்ந்த பொறிமுறை பண்டங்களின் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சராக அருந்திக பெர்னாண்டோ மீண்டும் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

ராகம பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் சில மாணவர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டமை தொடர்பில் விசாரணைகள் நிறைவடையும் வரையில் அருந்திக பெர்னாண்டோ இராஜாங்க அமைச்சுப் பதவியை இராஜிநாமா செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

---

## அமைச்சுப் பதவியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
விமல் வீரவன்ஸ மற்றும் கம்மன்பிலவுக்கு நீதி கிடைக்கும் வரை தான் அமைச்சராகச் செயற்பட முடியாது என்றும் வாசுதேவ நாணயக்கார மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கப்பட்ட விமல் வீரவன்ஸ அமைச்சு அலுவலகத்தில் இருந்து தனது உடமைகளை எடுத்துக் கொண்டு நேற்று வெளியேறிய நிலையில் வாசுதேவ நாணயக்கர, உதய கம்மன்பில ஆகியோருடன் இணைந்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்திக்கவுள்ளார் எனத் தெரிவித்துள்ளார்.

அமைச்சு காரியாலயத்திலிருந்து தமது தனிப்பட்ட உடைமைகளை அப்புறப்படுத்துவதற்காக முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ நேற்றுப் பிற்பகல் கைத்தொழில் அமைச்சுக்கு வருகை தந்தார்.

அதன்போது, தமது உடமைகளை எடுத்துக்கொண்டு அரச ஆவணங்களை அமைச்சிடம் கையளித்துவிட்டு முன்னாள் அமைச்சர் வெளியேறினார்.

மேலும் தனது அமைச்சில் இதுவரை தன்னுடன் இணைந்து பணியாற்றிய அதிகாரிகளுக்கு நன்றி தெரிவித்து விடைபெற்றார்.

இதையடுத்து, தனது சொந்த வாகனத்தில் அமைச்சிலிருந்து வெளியேறத் தயாராகும்போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கும் முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ பதிலளித்தார்.

இன்று (நேற்று) பிற்பகல் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்திக்கப் போகிறார் என வெளியான தகவல் குறித்து ஊடகவியலாளர் கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்குப் பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ, தாம் அவ்வாறானதொரு தீர்மானத்தில் இருக்கின்றார் என்றும், பிரதமருடன் தமக்கு எந்த வித முரண்பாடும், வெறுப்பும் இல்லை என்றும் குறிப்பிட்டார்.

வாசுதேவ நாணயக்கார மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் தம்முடன் இணைந்து பிரதமரைச் சந்திப்பார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

இது எந்த வகையிலும் சலுகைகளைக் கோரும் சந்திப்பாக இருக்காது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கப்பட்டமை குறித்து ஊடகவியலாளர் ஒருவர் வினவியிருந்தார்.

அதற்குப் பதிலளித்த விமல் வீரவன்ஸ, தனது பதவிக்காலத்தில் பொறுப்புணர்வுடனும், மகிழ்ச்சியுடனும் கடமையாற்றச் சந்தர்ப்பம் கிடைத்ததால் மனமகிழ்வுடன் அமைச்சை விட்டு வெளியேறுகின்றேன் என்று புன்முறுவலுடன் கூறினார்.

---

## வடக்கில் ரயிலுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
முன் பாய்ந்து இளைஞர் ஒருவர் தனது உயிரை மாய்த்தார்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த குளிரூட்டப்பட்ட கடுகதி ரயில் முன் பாய்ந்தே இந்த நபர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிளில் வந்த நபர், அதனை வீதியில் நிறுத்திவிட்டு ரயில் முன் பாய்ந்தார் என அங்கு நின்றவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, மாங்குளம் பகுதியில் ரயிலில் மோதுண்டு யுவதி ஒருவர் உயிரிழந்தார்.

நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாங்குளம் பகுதியைச் சேர்ந்த யுவதியே விபத்துக்குள்ளாகி மரணமானவராவார்.

## அசிங்கமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
விமல் வீரவன்ஸவுடன் சேர்ந்து நேற்றுத் தாம் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைக் கூறினார்.

நாட்டை இப்படிப் பற்றி எரியும் நெருக்கடிக்குள் தள்ளியவர் யார் என்பதை எழுத்துபூர்வமான ஆவணங்களுடன் நிரூபிப்போம். இது ஒரு சர்வதேச சதி வலை. அமெரிக்க மேலாதிக்கவாதிகளின் திட்டம். 1997 இல் இந்தோனேஷியாவுக்கு ஏற்படுத்திய அதே நிலைமையை இங்கு ஏற்படுத்தும் சூழ்ச்சி. அமெரிக்க எதிர்ப்பாளர்களை ஓரங்கட்ட அசிங்கமான அமெரிக்கர் செய்த வேலை இது.

– என்றும் அவர் குறிப்பிட்டார்.

---

## பிரதமர் அலுவலக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
வியாக்கியானத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. பிரதமர் அலுவலகத்தில் இருந்து நியமிக்கப்பட்டுள்ள பிரதிநிதி இங்கு வந்து கூட்டத்தில் பங்கேற்று வடையும் ரீயும் சாப்பிட்டுப் போகலாம்.

– இவ்வாறு யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத்தலைவரும் ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற விசேட ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

'யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் பிரதமரின் பிரதிநிதியாக கீதநாத் காசிலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார். யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் செயற்பட்டு வரும் நிலையில் அவருக்கு எதிராக பொதுமக்களால் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு பல முறைப்பாடுகள் பிரதமர் அலுவலகத்துக்குக் கிடைக்கப் பெற்றதையடுத்து யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் பிரதமரின் பிரதிநிதியாக கீதநாத் காசிலிங்கம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் இணைப்புச் செயலாளரான கீதநாத் காசிலிங்கம், வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான விசேட மீள்குடியேற்ற ஒருங்கிணைப்பாளராகவும் செயற்பட்டு வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது – என்று நேற்று செய்தி வெளியாகியிருந்தது.

இந்தச் செய்தி தொடர்பில் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவரான அங்கஜன் இராமநாதன் எம்.பி. மேலும் தெரிவிக்கையில்,

பிரதமர் அலுவலகத்தில் இருந்து ஒரு பிரதிநிதி நியமிக்கப்பட்டார் என்ற செய்தி பல ஊடகங்களில் வெளியானது. இது தொடர்பாக ஊடகங்களைத் தொடர்புகொண்டபோது நியமிக்கப்பட்டவர் தெரிவித்த விடயங்களையே தெரிவித்தோம் என்றன.

பிரதமர் அலுவலகத்தின் பிரதிநிதியாக அபிவிருத்திக் குழுக் கூட்டங்களுக்கும் பிரதேச அபிவிருத்திக்குழுக்கூட்டங்களில் கலந்துகொள்ள முடியும் என்பதுடன் இலகுவான இணைப்புக்காகவே இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது என்றும் உள்ளது. இதை நான் வரவேற்கின்றேன். மக்களின் தேவைகள் நேரடியாகப் பிரதமர் அலுவலகத்துக்குத் தெரியவரும்போது அதில் பல நல்ல விடயங்கள் உள்ளன. ஆனால், இந்தச் செய்திக்கு அரசியல் உள்நோக்கத்தோடு கொடுக்கப்பட்ட வியாக்கியானம் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை. இந்தச் செய்தி மாத்திரம் அல்ல. தொடர்ச்சியாக எம் மீது அவதூறு பரப்பிய பல முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இணைப்பாளராக உள்ள என்னை வளர்த்துவிடுகின்றீர்கள் என என்னுடைய செயலாளருக்கும் அவர் செய்தியை அனுப்பி இருக்கின்றார். தன்னுடைய அரசியல் வளர்ச்சிக்காகப் பிரதமர் அலுவலகத்தையும் ஊடகங்களையும் பயன்படுத்திப் பிழையான செய்தியை அவர் கூற முற்படுகின்றார்.

கடந்த காலங்களில் இந்த அலுவலகத்தின் ஊடாக செய்யப்பட்ட வேலைகளை விட பல விடயங்களை தற்போது செய்யக் கூடியதாகவுள்ளது. நான் செய்தது பிழையெனில் அதற்கு நான் முழுப் பொறுப்பு ஏற்கின்றேன். ஆனால், பொய்ச் செய்தியைச் சொல்லி சுயலாப அரசியல் செய்வதற்கு இணைப்பாளர் என்பவருக்கு ஒரு சிலர் உடந்தையாக இருக்கின்றனர்.

குறித்த நபர் ஒரு சில மாதங்களுக்கு முன்பு ஜனாதிபதி, பிரதமரின் வேலைத் திட்டத்தை நான், 'என் கனவு யாழ்' என்று என்னுடைய வேலைத்திட்டமாக மாற்றுவதாக அறிக்கை ஒன்றை வெளியிட்டு அதனை நாமல் ராஜபக்ஷவின் முகப்புத்தகத்தில் பகிர்ந்திருந்தார். இது தொடர்பில் நான் நாமல் ராஜபக்ஷவுடன் கேட்டபோது அது தனது முகப்புத்தகம் அல்ல. அது பலர் நடத்துகின்ற முகநூல் என்றார். அவருக்குத் தெரியாமலேயே பல விடயங்கள் நடப்பதாகவே நான் நினைக்கின்றேன்.

மக்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதை விட்டுவிட்டு அரசியல் காழ்ப்புணர்ச்சியால் போட்டி போட்டுக் கொண்டிருப்பது எதிர்க்கட்சியில் இருப்பவர்களுக்கு வாய்ப்பை ஏற்படுத்திவிடும்.

ஒரு சிலர் வாய்ப்புகளைப் பயன்படுத்தி அரசியல் காய்நகர்த்தல்களைச் செய்வதாகவே நான் பார்க்கின்றேன். இவரைப் பற்றிச் சொல்வதானால் யாழ். மாவட்டத்துக்கும் ஊடகங்களுக்கும் புதிதாக இருக்கலாம். இவரை எனக்கு நீண்டகாலமாக தெரியும். நாமல் ராஜபக்சவின் கிளிநொச்சி மாவட்ட செயலாளராக இருந்தார். நாமல் ராஜபக்ஷ கிளிநொச்சியில் செய்த வேலைகளின் ஆதரவைக் குறைக்க காரணமாக இருந்தார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் இவர் 2013இல் பதவி நீக்கம் செய்யப்பட்டார். அதற்கான காரணத்தை நீங்கள் அவர்களிடமே கேட்டுப் பாருங்கள். மக்களுக்கு நல்லது செய்ய விரும்புவர்களைத் தாக்கி அதிலிருந்து முன்னேற நினைப்பதை மிகவும் தவறான விடயமாக நான் பார்க்கின்றேன்.

பிரதமர் அலுவலகத்தில் இருந்து அவர்கள் சார்பில் ஒரு பிரதிநிதி நியமிக்கப்பட்டுள்ள நிலையில் அவர் இங்கு வந்து கூட்டத்தில் பங்கேற்றுவடையும் ரீயும் சாப்பிடலாம் – என்றார்.

---

## கையெழுத்துப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
மாத்தளையில் முத்துமாரியம்மன் கோவிலுக்கு முன்னால் கண்டி பஸ் நிலையத்திலும் –

இன்று நண்பகல் 12 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை கண்டியில் ஜோர்ஜ் டி சில்வா பூங்கா (டொறிங்டன்) முன்னிலையிலும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை ஹட்டனிலும், பண்டாரவளையிலும் இந்தக் கையெழுத்துச் சேகரிப்பு போராட்டம் முன்னெடுக்கப்படும்.

---

## மின் தடை விவரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...).
பி, கியூ, ஆர், எஸ், ரி, யூ, வி மற்றும் டபிள்யூ என நியமிக்கப்பட்ட வலயங்களில் காலை 8.30 மணி முதல் மாலை 6 மணி வரை மூன்று மணி நேரமும், மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை ஒரு மணி நேரமும் மின் வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. .

இ மற்றும் எவ் என பெயரிடப்பட்ட வலயங்களில் காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை நான்கு மணி நேரமும், மாலை 4.30 முதல் இரவு 10.30 மணி வரை மூன்று மணி நேரமும் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்றும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மேலும், நாளை ஞாயிற்றுக்கிழமை, ஏ, பி, சி என நியமிக்கப்பட்ட வலயங்களில் காலை 9 மணி முதல் மாலை 4.30 மணி வரை இரண்டு மணி நேரம் 30 நிமிடம் மின்வெட்டு விதிக்கப்படும் என்று ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, முன்னதாக அறிவிக்கப்பட்ட பிரிவுகளின் அடிப்படையில் கொழும்பு நகரத்துக்கான விநியோகப் பகிர்வு இடம்பெறும் எனவும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 299


# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**752.சிவகுமாரன் விடுதலைப் புலிகளால் மாவீரனாக ஏற்றுக் கொள்ளப்பட்டு பிரகடனப்பட்டிருக்க வேண்டியது வரலாற்று முக்கியம் வாய்ந்ததா?**

தமிழீழ விடுதலப் போராட்டத்தின் முளையானவன் சிவகுமாரன். அதில் முதலாவதாகத் தனது உயிரை அர்ப்பணித்து ஆகுதியானவன். அவன் தமிழ் மக்கள் யாவரது வீடுகளிலும் அவர்களது பிள்ளையாக குடியிருந்தான். மாவீரர் என்ற பதமமைத்து கௌரவங்கள் தரப்படுமுன்னேயே, சிவகுமாரன் தன்னுரை தந்து மாவீரனானவன். ஆகவே கௌரவங்களல்ல முக்கியம்.

இன்று தமிழ் மக்கள் இருக்கும் நிலையில் பிரபாகரனை மாவீரனாக, விடுதலையின தூணாக, தமிழ் மக்கள் தவிர்ந்த அமைப்பு ஒன்றோ சர்வதேசமோ கௌரவித்தால் அது தமிழ் மக்கள் அனுபவித்த நிலைமைகளை மாற்றுமா? ஆனாலும் தமிழ் மக்களை பொறுத்தளவில் இருவருமே மாவீரர்களாக வாழ்வார்கள்.

கட்சி அரசியலிருந்து விடுபட்டு, ஒரு தேசிய விடுதலை அமைப்பை ஆயுதப் போராட்டக் கட்டமைப்பாக அமைத்து, தமிழீழம் அமைக்க வேண்டும் என்று புறப்பட்டு, அதில் தன் உயிரை சயனைட் அருந்தி மடிந்தவனையும் மாவீரனாகக்



சிவகுமாரன்

கௌரவித்து, மாவீரர்களை அங்கிருந்து பட்டியலிடுவது, பெருந்தன்மையாவதோடு, பின்னால் வளர்ந்த இயக்கங்களின் ஒற்றுமையீனங்களையும் சகோதரப் படுகொலைகளையும் தவிர்த்திருக்கும். 'நாங்கள்' என்ற பாதையை வகுத்திருக்கும் நாய் வால்கள் இதுக்கும் நிமிரவில்லை!

**753.தொடரும் அரசியலும் நாய் வால் போன்று நிமிர்த்த முடியாததாகத்தானே இருக்கிறது?**

1833 இல் நடத்தப்பெற்ற கோல்புறூக் அரசியல் சீர்திருத்தம் ஒற்றையாட்சியையே அடிப்படையாகக் கொண்டது. அதுவே இயல்பாக சோல்பரி குடியரசு யாப்பு முறையிலும் ஒற்றையாட்சியாக சிங்கள பெரும்பான்மையினரிடம் ஆட்சி அதிகாரத்தை கொடுக்க, அது தமிழ் மக்களை ஆட்சி அதிகார கட்டமைப்பிலிருந்து ஒதுக்கியது. அதனால் ஜீ.ஜீ.பொன்னம்பலம் தமிழ் இனத்தை அடிப்படையாக வைத்து அரசியல்செய்ய, அவரிலிருந்து பிரிந்து செல்வநாயகம் தமிழரசுக் கட்சியை அமைத்து, சமஷ்டி கோரி அதனைத் தமிழ்தேசிய அரசியலாக வளர்த்தார். சமஷ்டிக் கோரிக்கை வடக்கு, கிழக்கை தமிழர் தாயகமாக வரையறுத்து, அதற்கு அதிகாரங்களைக் கோருவதாக அமைந்தது. அந்த சமஷ்டிக்கு மனுக்கள் அனுப்புதல், நாடா



தந்தை செல்வா

ளுமன்றத்தில் பேசுதல் என்பதில் இருந்து, பின் காலி முகத்திடலில் சத்தியாக்கிரகம், திருமலை யாத்திரை, சிங்கள ஸ்ரீ எதிர்ப்பு, கச்சேரிகளுக்கு முன்னாலான சத்தியாக்கிரகங்கள் என எழுச்சியடைந்தன. இவற்றால் பண்டாரநாயக்கா – செல்வநாயகம் ஒப்பந்தம், செல்வநாயகம் – டட்லி ஒப்பந்தங்கள் வந்து கிழித்தெறியப்பட்டன.

ஆனால் 1965 ஆம் ஆண்டு தமிழரசு கட்சி ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில் இணைந்து அமைச்சுப் பதவியைப் பெற்றதுமன்றி தேசிய (சிங்க) கொடியையும் ஏற்றி, வரவேற்பெல்லாம் தந்தனர்.

தமிழரசுக் கட்சியிலிருந்த இளைஞர்கள் இதனால் சமஷ்டி கோரிக்கை யதார்த்தமானதல்ல, கட்சிகளுக்கு அப்பால் ஒரு விடுதலை இயக்கத்தை தனித் தமிழ் நாட்டுக்குள் உருவாக்க வேண்டும் என சிந்தித்துக் காரியமாற்றினார்கள். இவை இரண்டுமே தனியாக இலங்கை மட்டத்திற்குள்ளே இயங்கியவை.

ஆனால் 1983 இன்பின் இனக்கலவரத்தால் பிராந்திய மட்டத்தில் இந்தியாவின் ஆளுமைக்குள் விவகாரம் வந்தது. நாடாளுமன்ற பேச்சுக்களிலேயே தங்கியிருந்த கூட்டணியினருக்கு, இந்திய ஆதரவு சிங்கள பேரினவாதத்தை எதிர்கொள்ளக் கூடிய திராணியைத் தந்தது.

1991 இல் ராஜிவ் காந்தியின் மரணத்தோடு தமிழர் விவகாரங்கள் பிராந்திய எல்லையையும் கடந்து சர்வதேச பரப்புக்குச் சென்றதால், ஆக இலங்கை மட்டத்துக்குள் இலங்கை அரசும் பேரினவாதமுமே எதிரிகளாக இருந்து, பின் பிராந்திய மட்டத்தில் இலங்கை அரசு அதன் பேரினவாத ஆதரவாளர்கள், பிராந்திய வல்லரசு என்பவற்றோடு மல்லுக்கட்ட வேண்டியிருந்தது. சர்வதேச பரப்புக்கு அது தள்ளப்பட்டபோது சர்வதேச வல்லரசுகள் எல்லாமே இணைந்து ஆயுதப் போராட்டத்தை 2009 இல் அழித்தார்கள். இந்த அழிவுக்கு முன் அடைந்திருக்கக் கூடிய தீர்வுகள் நாய் வால்கள் போல் தங்களது சிந்தனைகளையோ அபிப்பிராயங்களையோ தமிழ் மக்களின் நன்மைகள் கருதி நேராக்க முடியாததால் பயன்படாமலே போயின.

சந்திரிகா அம்மையார் காலத்தில் தரப்பட்ட தீர்வை ஆராய்ந்து அதனை ஏற்றுக் கொள்ளலாம் என சம்பந்தன், நீலன் திருச்செல்வம் போன்ற பலரும், மத்திய குழுவும் அதே கருத்தில் இருந்தாலும், கட்சிக்குள் இருந்த விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களான யோசேப் பரராஜசிங்கம் போன்றவர்களால் நடப்பவை உடனுக்குடன், அறிவிக்கப்பட்டு அந்த முயற்சிகள் குழப்பப்பட்டன. இந்தக் காலகட்டத்தில் அதிகாரப் போட்டி சந்திரிகாவுக்கும் மஹிந்தாவிற்கும் இடையே இருந்தது. தனக்குக் கட்சியிலிருந்து ஜனாதிபதியாகும் வாய்ப்பு உறுதிபடுத்தப்பட வேண்டும் என்று பேரினவாதிகளுடன் சேர்ந்து சந்திரிகாவுக்கு மஹிந்தா நெருக்குதல் தந்தார். சந்திரிகா முன்னெடுத்த பேச்சுவார்த்தைகளே இவற்றுக்குத் துரும்பாக பாவிக்கப்பட்டன. தமிழ்ப் பின்னணி கொண்ட – ஆனால் கொழும்பு தேசிய பரப்பில் வளர்ந்த – லக்ஷ்ன் கதிர்காமர் வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்பட்டதும் சந்திரிகா சில சமயம் சர்வதேச அழுத்தங்களால் அவரையே பிரதமராக நியமிக்கலாம் என்ற வதந்திகள் வளரவிடப்பட்டு, அவரது கொலை உள்வீட்டுப் பரப்புக்களால் பாதுகாப்புப் படையினரைப் பாவித்து நடத்தப்பட்டதா அல்லது விடுதலைப் புலிகள் பாவிக்கப்பட்டனரா என்ற ரீதியிலும் விசாரணைகள் எழுந்தன.

மஹிந்தாவின் நெருக்குதல்கள் தீர்வுப் பேச்சுக்களைக் குழப்புகின்றன என சந்திரிகா ஜே.வி.பியினரதும் மற்றைய பேரினவாதக் கட்சிகளினதும் அனுசரணையைத் தேடினார். இது அவரது சகோதரியினால் கூட தனிப்பட்ட முறையில் கண்டிக்கப்பட்டது. அவர்களது பேச்சைக் கேட்டு, பேச்சுவார்த்தைகளில் சுனாமி கட்டமைப்பு இணக்கங்கள் காணப்பட்டும் அவை தளும்பின. அவற்றைப் பாவித்து பேரினவாதிகளை முன்வைத்தே மஹிந்த ஜனாதிபதித் தேர்தலில் வென்று நோர்வே பேச்சு வார்த்தைகளையும் முன்னேறவிடாது போர் முரசைக் கொட்டினார்.

நோர்வே சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது பாலசிங்கத்தால் ஏற்று கையெழுத்திடப்பட்ட சமஷ்டி அமைப்பு முறையிலான பரிசீலனை இடைக்கால



கதிர்காமர்

நிர்வாக அரசை முன்னெடுத்தவர்களால் தள்ளப்பட்டு, பாலசிங்கமும் பேச்சுவார்த்தைகளில் இருந்து தவிர்க்கப்பட்டு, மஹிந்த அரசுக்கு யுத்தத்துக்கு நிலைமை வழி சமைத்தது.

வட்டுக்கோட்டை தீர்மானத்தை நிறைவேற்றிய நாள்களில், தாம் அதை பெறுவதற்காக எடுக்கும் முனைப்புக்களை விட, தங்களிடம் இருக்கும் தமிழீழத்தின் எல்லைகளுக்காக, அந்த பழத்துக்காக வௌவால்கள் சர்வதேசத்தின் எல்லாப் பகுதியிலிருந்தும் பறந்து வரும், தக்க தருணம் வரும்போது அது அமையும் என்று கூட்டணியினர் நிலைப்பாடு எடுத்தனர். தாங்கள் ஆயுதப் போராட்டத்தில் இருக்கும்வரை அது நடக்கும், தங்களோடு சர்வதேசம் பேச வேண்டும் என பிரபாகரன் தன்னுடையை வாலை நிமிர்த்துவதாக இல்லை. பிரபாகரனோடு அவர்கள் அமைத்த கூட்டமைப்பினரும் அதை நம்பியிருந்தனர். அவர்கள் எல்லோருமே நம்பியிருந்த சர்வதேசத்தால் தமிழீழம் உதவாக்கரையாக உதறி எறியப்பட்டு, உதாசீனப்படுத்தப்பட்டுள்ளது. தங்களது நாய் வால்களை நிமிர்த்த முடியாமல், சர்வதேசங்கள் எடுத்த முயற்சிகளையும் புறக்கணித்தவர்களே அவர்களைக் குற்றம் கூறுகிறார்கள். இலவம் பழத்தைத் தேடி வௌவால்கள் வருவதில்லை. இலவு காத்த கிளிகள்தான் இங்கு உதாரணமாக இருக்கின்றன.

(வளரும்)



மஹிந்தவும் சந்திரிகாவும்

# பாட்டும் நானே? .....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்போதைக்கு இதைத் தவிர வேறு வழி இருப்பதாய்த் தோன்றவில்லை. டக்ளஸ் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க விரும்பாமல் இருக்கிறார் என்று சொல்கிறவர்கள், சென்ற அரசாங்கத்தை ஆதரித்த போது இந்தப் பிரச்சினையைத் தீர்த்திருக்கலாமே! ஏன் தீர்க்கவில்லை என்பது முதல் கேள்வி. சகோதர ஒற்றுமையை டக்ளஸ் குறைக்கப் பார்க்கிறார் என்றால் அது எப்படி என்பது அடுத்தகேள்வி. பிரச்சினையைத் தீர்க்க டக்ளஸ் விரும்பவில்லை என்று இவர்கள் சொல்வது உண்மை என்றால், அதனைத் தீர்க்க இவர்கள் ஒரு வழியை முன்மொழியலாமே. அதை ஏன் செய்யவில்லை என்பது அதற்கடுத்த கேள்வி. அரசியலுக்காக உணர்ச்சிகளைக் கிளறி, எதிரிகளைப் பழி வாங்க நினைப்பதை விட்டுவிட்டு, இதுபோன்ற இனத்திற்குப் பொதுவான பிரச்சினைகளில் பகை பாராது நம் தலைவர்கள் ஒன்றுபட்டுச் செயற்படவேண்டும். செய்வார்களா?

என் மனதுக்குப்பட்ட உண்மையைச் சொல்லிவிட்டேன். இனி என்ன? இவர் டக்ளஸின் ஆள், அவரிடம் ஏதோ பெறுவதற்காய் வால் பிடிக்க முயற்சி பண்ணுகிறார் என்றெல்லாம் பழி சுமத்தி விமர்சனக் கணைகளால் என்னைக் காயப்படுத்தித் திருப்தி கொள்ளவேண்டியதுதான். இன்றைய நிலையில் நம் இனத்தைப் பொறுத்தவரை, சார்புபட்டுப் பேசுவது உண்மையாகவும், உண்மையைப் பேசுவது சார்புபட்டுப் பேசுவதாகவும் தான் வியாக்கியானம் செய்யப்படுகிறது. அதற்கு நான் என்ன செய்ய?

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ வாரிதியாரை வறட்டி தட்டப் போறாங்கள்.**

**4. கேள்வி:-** உக்ரைனின் அதிபர் ஜெலென்ஸ்கி பற்றி இப்போது என்ன நினைக்கிறீர்கள்?

**பதில் :-** தொலைக்காட்சி நாடகங்களின் மூலம் ஒரு கொமேடியனாய் அறிமுகமாகி, பின் நாட்டின் தலைவரான அவர், இன்று அந்நாட்டு மக்களைப் பொறுத்தவரை உண்மை ஹீரோவாய் உயர்ந்து நிற்கிறார். ஆரம்பத்தில் அவர் எடுத்த மேற்கு நாட்டுக்குச் சார்பான முடிவு சரியோ? பிழையோ? எப்படியும் இருந்துவிட்டுப் போகட்டும். இன்று போர் உக்கிரம் அடைந்திருக்கும் நிலையில், அங்கிருந்து தப்பி வந்துவிடுங்கள் என்று அமெரிக்கா போன்ற வசதி மிக்க நாடுகள் மாறி மாறி கோரிக்கை விடவும், என் தாய்நாட்டை விட்டு எக்காரணம் கொண்டும் கிளம்பமாட்டேன் என்று கூறி, நாட்டு மக்களைத் திரட்டி அசையாமல் நின்று ரஷ்யாவின் கண்களில் விரலைவிட்டு ஆட்டிக் கொண்டிருக்கும் அவரது துணிவு மதிக்க வைக்கிறது.

அவரை நினைக்கும் போது பிரச்சினைகள் வந்தபோது மக்கள் எப்படியும் போகட்டும் என்று கைவிட்டுவிட்டு வெளிநாடுகளில் போய் வசதியாய் வாழ்ந்துவிட்டு பிரச்சினைகள் தீர்ந்ததும் நாடாளுமன்றப் பதவிகளைக் கைப்பற்றி மீண்டும் தலைவர்களாய் இருந்துகொண்டிருக்கும் நம் தலைவர்கள் சிலர் மனதில் வந்து போகிறார்கள்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ அவர் தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே... நம்ம இலக்கிய அறிவு எப்புபூடீ?**

**5. கேள்வி:-** ஐரோப்பிய, மேற்கு நாடுகளின் கோரிக்கைகளையெல்லாம் நிராகரித்தும் ஐ.நா.சபையின் கண்டனங்களை மதியாமலும் ரஷ்யா போரில் உக்கிரம் காட்டி வருகிறது. அமெரிக்கச் சார்பு நாடுகளெல்லாம் ரஷ்யாவின்மேல் அடுத்தடுத்துத் தடைகளை அறிவித்துக் கொண்டிருக்கின்றன. முடிவு என்னாகப் போகிறது?

**பதில் :-** ரஷ்யாவைக் கண்டிக்கின்ற தார்மீகத் தகுதி அமெரிக்காவுக்கோ, ஐரோப்பிய நாடுகளுக்கோ இல்லை என்றே கருதுகிறேன். ஈராக்கில் அணுகுண்டு இருப்பதாய்ச் சொல்லி உள்நுழைந்த கையோடு பதினையாயிரம் பேர் வரையிலான மக்களைக் கொன்று குவித்ததுதான் இந்த அமெரிக்கா. அந்நாட்டு ஜனாதிபதி சதாம் உசேனைத் தேடிப்பிடித்துப் பகிரங்கமாக அவர்கள் தூக்கிலிட்டார்கள். லிபியாவுக்குள் புகுந்து அந்நாட்டுத் தலைவரான கடாபியை நாய் போல் இழுத்துச் சென்று சுட்டுக் கொன்றார்கள். ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளுக்குள் புகுந்து அட்டூழியம் பண்ணினார்கள். அப்போதெல்லாம் இந்த நாடுகள் என்ன செய்து கொண்டிருந்தன? ஐ.நா. சபை என்ன செய்து கொண்டிருந்தது?

ஐரோப்பிய, மேற்கு நாடுகள் காட்டும் ஜனநாயக முகம் என்பது பொய்யானது. அந்த ஜனநாயக முகமூடியைப் போட்டுக் கொண்டு ஒருவரோடு ஒருவர் கைகோர்த்து உலகைத் தம்வயப்படுத்த அவர்கள் முயற்சிக்கிறார்கள். அவர்களின் கைப்பொம்மையாகத்தான் இன்றைய ஐ.நா.சபையும் இருக்கிறது.

சோவியத்யூனியன் வலிமையாக இருந்தபோது இவர்களைச் சமன்செய்யவென ஒரு சக்தி இருந்தது. 1991 இல் சோவியத்யூனியன் உடைந்து போனதும் இவர்கள்பாடு கொண்டாட்டமாயிற்று. இவர்கள் வகுத்ததே உலகின் சட்டமாயிற்று. உலகிற்கு நல்ல முகம் காட்டி ஊரைக் கெடுக்கின்ற நம் தமிழ் சினிமா வில்லன்கள் போலத் தான் இவர்கள் மாறினார்கள்.

இன்று ரஷ்யா பலம் பெற்று நிமிர்ந்திருக்கிறது. அதன் அடையாளம் தான் ரஷ்ய, உக்ரைன் போர். சரியோ, பிழையோ உலகின் இன்றைய நிலையில் இத்தகைய ஓர் அமெரிக்க எதிர்ச்சக்தி தேவைப்படுகிறது. அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளைத் துணிந்து எதிர்க்கும் ஆளுமையோடு புடின் எழுந்திருக்கிறார். உக்ரைனுக்கு எல்லோருமாகச் சேர்ந்து வால் முறுக்கிவிட்டுவிட்டு இன்று அது அடிக்குமேல் அடிவாங்க, இவர்கள் அந்தரப்பட்டு நிற்கிறார்கள். தாம் விதிக்கும் பலவிதமான தடைகளால் ரஷ்யாவை இவர்கள் பணிய வைக்க முயல்கிறார்கள். அவர்கள் எண்ணம் நிறைவேறப் போவதாய்த் தெரியவில்லை. இவர்கள் தரும் அழுத்தம் அதிகமானால் அது மூன்றாம் உலகப்போராக வெடிக்கும் ஆபத்து இருக்கிறது. இருக்கிறது என்ன? அந்த ஆபத்து நெருங்கிவிட்டதென்றே தோன்றுகிறது. மூன்றாம் உலகப் போர் நிகழ்ந்தால் வெல்லப் போகிறவர் யார் என்பதை விட உலகில் இருக்கப்போகிறவர் யார் என்பதுதான் பிரச்சினையாயிருக்கும்?

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ வாரிதியாரும் கொமியூனிஸ்டாகி விட்டார் போல. ஹி.. ஹி.. ஹி..!**

# பாடசாலைகளைத் திறப்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்குக!

## அரசை வலியுறுத்துகிறார் ஸ்டாலின்

நாட்டில் பாடசாலைகளை மீளத் திறப்பதற்கான உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு அரசாங்கத்துக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த விடயத்தை இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் ஊடகமொன்றுக்கு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூரியவை வருமாறு:-

பாடசாலைகளை மீளத் திறப்பதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

எதிர்வரும் 7ஆம் திகதி பாடசாலைகள் மீளத் திறக்கப்படவுள்ளன.

எனினும், தற்போது நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் மின்சாரத்தடை காரணமாக பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன.



எனவே இதன் காரணமாக மாணவர்களுக்கு பிரச்சினை ஏற்படாத வகையில் அரசாங்கம் உரிய ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# அண்மைக்காலமாக இளைஞர்களிடையே காது கேளாமை அதிகரித்து காணப்படுகிறது!

## வைத்திய நிபுணர் தெரிவிப்பு

அண்மைக்காலமாக இளைஞர்களிடையே காது கேளாமை அதிகரித்துள்ளது.

தொண்டை, காது, மூக்கு தொடர்பான விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் யசத் வீரக்கொடி இதனைத் தெரிவித்துள்ளார்.

செவித்திறன் கருவிகளின் பாவனை அதிகரித்துள்ளமையே இந்நிலைமைக்குக் காரணமாக அமைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் தரவுகளில் இந்த விடயம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# யுத்தக் குற்றங்களை மூடி மறைக்கும் வெளியுறவு அமைச்சர் பீரிஸின் உரை!

## முன்னாள் எம்.பி. ஸ்ரீநேசன் குற்றச்சாட்டு



யுத்தத்தில் ஏற்பட்ட வெறுப்புகளை மீட்டுதல் யுத்தக் குற்றங்கள் தொடர்பாக சாட்சியங்களைத் திரட்டுதல் தவிர்க்கப்பட வேண்டியவை என ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் அமைச்சர் ஜி.எல்.பீரிஸின் உரை அமைந்துள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜி. ஸ்ரீநேசன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கை வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஆரம்ப உரையை ஆற்றியிருந்த நிலையில் அது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் கருத்து தெரிவித்த அவர் –

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் ஆரம்ப உரையை இலங்கை வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஆற்றியுள்ளார். அதன் போது அரசின் இறுதி யுத்தக் குற்றங்களை மூடி மறைக்கக் கூடிய கருத்துக்களை அவர் முன்வைத்துள்ளார்.

அந்த வகையில் யுத்தத்தில் ஏற்பட்ட வெறுப்புக்களை மீட்கக் கூடாது, யுத்தக் குற்றங்கள் தொடர்பாக சாட்சியங்களைத் திரட்டுதல் தவிர்க்கப்பட வேண்டும் என்ற கருத்துக்களை வலியுறுத்தியுள்ளார்.

இந்தக் கருத்துக்களைக் கிளறிப் பார்த்தால் சில உண்மைகள் வெளிப்படுகின்றன. இது வரை இறுதி யுத்தத்தில் யுத்தக் குற்றங்கள் இடம்பெறவில்லை என்றும் மக்களை மீட்கும் மனிதாபிமான யுத்தம் இடம்பெற்றதாகவே அரசு கூறி வந்தது. அப்படியென்றால் யுத்தக் குற்றங்கள் இல்லை என்றால் ஆட்சியாளர்கள் அச்சப்படத் தேவையில்லை.

மனித உரிமைப்பேரவை சாட்சியங்களைக் தேடினாலும் கிடைப்பதற்கு வாய்ப்பு இல்லை. சாட்சியங்களாக படையினரின் அறப்பணிகள் மாத்திரமே வெளிவரும்.

எனவே வெறுப்புக்களும் ஏற்பட வாய்ப்பு இல்லை. உண்மையில் யுத்தக் குற்றங்கள் ஏற்பட்டிருந்தால் தான் தமிழ் மக்களுக்கு வெறுப்புகள் ஏற்படும். சாட்சியங்கள் மூலமாக அரசுக்குப் பாதிப்புக்கள் ஏற்பட வாய்ப்புள்ளன.

இதில் இருக்கின்ற உண்மை என்னவென்றால் யுத்தத்தில் பாரிய மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றுள்ளன. அதற்கான சாட்சியங்கள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இருக்கின்றன. அவை திரட்டப்படும் போது பல உண்மைகள் வெளிவரும். இதனால் அவை சர்வதேச ரீதியாக உறுதி செய்யப்பட்டு விடும்.

உள்நாட்டுப் பொறிமுறை இல்லாமல் போனதற்கான உண்மைகள் காரணங்கள் உணரப்பட்டு விடும் என்பதே வெளியுறவு அமைச்சர் பீரிஸின் அச்சமாக உள்ளது.

கொலைகள், பலாத்காரங்கள், சித்திரவதைகள் எல்லாம் வெளியாகி விடும் என்று ஆட்சியாளர்கள் அஞ்சுகின்றார்கள், கடத்தப்பட்டவர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கக் கூடாது, இனவாத ரீதியில் கௌரவமானவர்கள் எனக் கொள்ளப்படும் குற்றவாளிகள் தண்டிக்கப்படக்கூடாது, குற்றங்களுக்குக் காரணமாக இருந்து கட்டளை இட்ட ஜாம்பவான்கள் யாரென அறியப்படக்கூடாது என்பதிலும் ஆட்சியாளர்கள் கவனமாக உள்ளார்கள்.

இறுதி யுத்தத்தில் தமிழர்களே பெருந்தொகையில் உயிர்களை இழந்துள்ளார்கள் என்பதால் சிங்கள ஆட்சியாளர்கள் அதனை சர்வ சாதாரணமாக நினைக்கக் கூடாது. அவர்களும் இந்நாட்டுப் பிரஜைகள் என்பதை இனவாத மூளையர்கள் மறக்கக்கூடாது.

இழப்புகளுக்கு நீதியும் இல்லை, இனப் பிரச்சினைக்குத் தீர்வும் இல்லை. சமத்துவ உரிமையும் இல்லை. அப்படியென்றால் தமிழர்களை ஆள்வதற்கான தகுதியை ஆட்சியாளர்கள் இழந்துள்ளார்கள்.

எனவே தமிழர்கள் தம்மைத்தாமே ஆள்வதற்கான சுயநிர்ணய உரிமையைக் கோருவதிலோ சமஷ்டியாட்சியைக் கோருவதிலோ எந்தத் தப்பும் கிடையாது.

1948 இல் இருந்து இன்று வரை தமிழர்களின் பட்டறிவுத்தேறல் இதுவேயாகும். இதனை சர்வதேச சமூகம் இனியாவது புரிந்துகொள்ள வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.03.2022இல் வெளியிடப்பெற்றது.